# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்




ஏற்பாடு

**தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு**
**தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்**
**தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு**

FOCUS

# கொந்தளிக்கும் உள்ளாட்சிகள்

– ரிச்சர்டு மகா பத்ரா

**உள்ளாட்சி தேர்தல் என்பது சுய நிர்வாகத்திற்காக வாக்களிப்பதுதானேயன்றி சுயநிர்ணயத்திற்கு அல்ல. கடந்த ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தபோது ஏற்பட்ட பரபரப்பு போல நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் நடந்ததில்லை. கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக நடைபெற்ற மாநில அளவிலான உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்காளர்கள், வேட்பாளர்கள் ஆகிய இரு சாராருமே தீவிரவாத அச்சுறுத்தல்களை மீறி வெற்றிகரமாகப் பங்கேற்றார்கள். ஆனால், கடந்த ஏழு மாதங்களில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, சுமார் 900 உள்ளாட்சித் தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். அதைவிடப் பெரிய அச்சுறுத்தலும் உள்ளாட்சித் தலைவர்களுக்கு இருக்கிறது: சுய நிர்வாகத்திற்கான அதிகாரங்களை வழங்க மாநில அரசுக்கு உள்ள தயக்கம்தான் அந்தப்பெரிய அச்சுறுத்தல். கிராம ஊராட்சித் தேர்தல்கள் நடந்து ஓராண்டுக்கு மேலாகியும் மாநில அரசு மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்பை ஏற்படுத்தவில்லை. அதிகாரமற்ற நிலையில் உள்ளாட்சித் தலைவர்கள் மேலும் மேலும் மக்களின் கோபத்தை எதிர்கொள்கிறார்கள். தீவிரவாதிகளுக்கும் அமைதியற்ற வாக்காளர்களுக்கும் இடையே சிக்கிக்கொண்டவர்களாக உள்ள உள்ளாட்சித் தலைவர்களுக்கு பதவி விலகுவதுதான் சிறந்த வழியாகத் தெரிகிறது. இதுகுறித்து இங்கு அலசுகிறார் ரிச்சர்டு மகா பத்ரா.**

இம்தியாஸ் அப்சல் பெய்க் தனது தோள்களில் சுமக்க முடியாத ஒரு சுமையை சுமந்துகொண்டிருக்கிறார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், பிரிவினைவாதத் தலைவர் சையது அலி கிலானியின் சொந்த ஊரான துரூ கிராமத்தில் கடந்த 25 ஆண்டுகளில் நடந்த தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்டவர் இவர். தேர்தல்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கிலானி அறிவித்ததைத் தொடர்ந்து 1987 முதல் அந்த கிராமத்தில் யாருமே வாக்குப் பதிவு செய்ததில்லை. கடந்த ஆண்டு ஏப்ரலில் நடந்த ஊராட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று கிலானி விதித்திருந்த ஃபட்வா ஆணையை மீறியது மட்டுமல்லாமல் ஊராட்சித் தலைவராகவும் பெய்க் தேர்ந்தெடுக்கப்பட்டார். “ஆஸாதி (சுதந்திரம்) என்பது வேறு விவகாரம் அதற்காக உள்ளூர் மேம்பாடு காத்துக்கொண்டிருக்க முடியாது,” என்கிறார் அவர்.

ஆனாலும் பெய்கின் இந்த உறுதிப்பாடு வீரியம் இழந்து வருகிறது. துப்பாக்கி தாங்கிய ஒரு சொந்த மெய்க் காவலரை 24 மணி நேரமும் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர் அடிக்கடி மற்ற ஊராட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தொலைபேசி மூலம், “பதவி விலகாதீர்கள்” என்று கேட்டுக்கொள்வதை காண முடியும். பெய்க் போலவே, தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை மீறி தேர்தலில் போட்டியிட்ட அவர்களில் பெரும்பாலோர் இப்போது அவர் சொல்வதை கேட்கத் தயாராக இல்லை.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுப்பது போல் ஜம்மு காஷ்மீரில் 2011 ஏப்ரல் முதல் ஜூன் வரையில் 17 கட்டங்களாக ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்த மாநிலத்தில் தீவிரவாதம் வெடித்த பிறகு மிக விரிவான அளவுக்கு நடந்த தேர்தல் இதுதான். வியக்கத்தக்க வகையில் 79 சதவீத வாக்காளர்கள் வெளியே வந்து, உள்ளூர் தன்னாட்சி அமைப்புகளுக்கான, கட்சி சாராத அந்த தேர்தலில் பங்கேற்று வாக்குப் பதிவு செய்தார்கள். 4,200 ஊராட்சிகளுக்கு சுமார் 33,000 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.


காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரவாத இயக்கத்தின் “மிக இறுகிப்போன” முகத்தில் விழுந்த அறையாக அந்தத் தேர்தல் நடந்தது. ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் தேர்தல் அரசியலில், முதல் முறையாக அந்த உள்ளாட்சித் தேர்தல் கிராம மேம்பாடு என்பதை முன்னுக்குக் கொண்டு வந்தது.

ஆனால், ஒரே ஆண்டில் அந்த மேம்பாட்டுக் கனவுகள் மீண்டும் கானல் நீராகியுள்ளன. கடந்த ஏழு மாதங்களில் பல தீவிரவாதக் குழுக்கள் சுவரொட்டிகளை எங்கும் ஒட்டியுள்ளன. அந்த சுவரொட்டிகள், ஊராட்சிப் பிரதிநிதிகள் உடனடியாக பதவி விலகவில்லை என்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று மிரட்டுகின்றன. 2012 ஏப்ரல் மாதத்தில் லஷ்கர்–இ–தொய்பா, ஜெய்ஷ்–இ–முகமது ஆகிய தீவிரவாத அமைப்புகளால் வெளியிடப்பட்டவை என கூறப்படும் மிரட்டல் சுவரொட்டிகள் தெற்கு காஷ்மீரின் புல்வாமா, ஷோபியான், அனந்த்நாக் ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. கடந்த ஜூன் மாதம் சுமார் 400 ஊராட்சிப் பிரதிநிதிகள் பதவி விலகினார்கள். தேர்தலுக்குப் பிறகு 5 ஊராட்சித் தலைவர்கள்

கொல்லப்பட்டார்கள். அதில் தீவிரவாத அமைப்புகள் சம்மந்தப்பட்டிருக்கிறதா என்பதை காவல்துறையினரால் இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை. கடந்த செப்டம்பரில் நடந்த கொலைகள், பதவி விலகல்களை மீண்டும் முடுக்கிவிட்டன. ஒரே மாதத்தில் சுமார் 500 ஊராட்சிப் பிரதிநிதிகள் தங்களது பதவி விலகல் கடிதங்களை தாக்கல் செய்தனர். இதன் மூலம் பதவி விலகியவர்களின் எண்ணிக்கை 900 ஆக அதிகரித்தது.

## அச்சுறுத்தலின் கீழ் ஒரு தகர்வு

### காஷ்மீர் பகுதியில் 900 ஊராட்சி உறுப்பினர்கள் பதவி விலகல்




**ஆதாரம்:** *பத்திரிகை விளம்பரங்கள், உள்ளாட்சித் தலைவர்கள் அளித்த தகவல்கள், மாநில தலைமை தேர்தல் அதிகாரி அளித்தத் தகவல்கள்*

பதவி விலகலை தாமதப்படுத்தக்கூடிய சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கு பதிலாக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அதற்கான குறுக்கு வழியை நாடுகிறார்கள். வட்டார நாளேடுகளில் தாங்கள் பதவி விலகிவிட்டதாகக் கட்டணம் கொடுத்து விளம்பரம் செய்கிறார்கள். சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அந்த விளம்பரங்களில் அறிவிக்கிறார்கள். விளம்பரத்திற்காக செலவு செய்ய முடியாமல் இருப்பவர்கள் தங்கள் பகுதியில் உள்ள மசூதியில் நடக்கும் வெள்ளிக்கிழமை தொழுகைக்குச் சென்று பதவி விலகலை அறிவிக்கிறார்கள். இதுவரையில் பதவி விலகியுள்ள 900 பேரில் 50 பேர் மட்டுமே சட்டப்பூர்வமாக பதவி விலகல் கடிதம் கொடுத்துள்ளனர் என்று மாநில உள்ளாட்சித்துறை அலுவலகம் தெரிவிக்கிறது. 1990ஆம் ஆண்டுகளில், தீவிரவாதிகளின் மிரட்டலைத் தொடர்ந்து பல அரசியல் கட்சிகளில் இருந்து தொண்டர்கள் கூட்டம் கூட்டமாக விலகினார்கள். அதைத்தான் தற்போதைய நிகழ்வு நினைவூட்டுகிறது.

“பிரதிநிதிகள் இவ்வாறு பரவலாக பதவி விலகுவது கண்டு நான் அதிர்ச்சி அடைகிறேன்” என்கிறார் மாநில உள்ளாட்சித்துறை அமைச்சர் அலி முகமது சாகர். நிலைகுலைந்து போயுள்ள மாநில அரசும், உள்ளாட்சி பிரதிநிதிகள் தாக்கல் செய்யக்கூடிய சட்டப்பூர்வ பதவி விலகல் கடிதங்களை ஏற்க வேண்டாம் என்று மாவட்ட ஆணையர்களுக்குக் கூறியுள்ளது. விளம்பரங்களிலோ தொழுகைக் கூட்டங்களிலோ அறிவிக்கப்படுவது அதிகாரப்பூர்வ பதவி விலகலாக ஏற்கப்படமாட்டாது என்றும் அரசு அறிவித்துள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தள்ளுபடி செய்யத்தக்கதாக இருக்கலாம். ஆனால், காஷ்மீரில் அமைதியை சீர்குலைக்கக்கூடிய ஒரு சிறு அச்சுறுத்தல் கூட பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி விடுகிறது. குறிப்பாக, தீவிரவாத வன்முறைகள் குறையத் தொடங்கியுள்ள நிலையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

### ஏன் இந்த எதிர்மறை விளைவு ?

30 ஆண்டு காலமாக தீவிரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்த ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து மீள்வதற்கு தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிறது. மாநிலத்தில் இயல்புநிலை திரும்பிவிட்டது என்று அறிவிப்பதற்கு ஏற்ற சூழலை சென்ற ஆண்டு அமைதியான முறையில் நடந்த உள்ளாட்சித் தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்தது. “கிராமங்கள் முன்னேறுவதற்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நாம் இழந்துவிடக் கூடாது என்பதே எனது கவலை,” என்று கூறுகிறார் அமைச்சர் சாகர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் அச்சம் ஒரு வலிமையான ஆயுதமாக இருக்கிறது. பாதுகாப்பாக இருக்கிற உணர்வை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமானால், ஒவ்வொரு உள்ளாட்சிப் பிரதிநிதி பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்தியாக வேண்டியிருக்கிறது. இது கிட்டத்தட்ட

சாத்தியமற்றதாக இருக்கிறது. 4,200 பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றால் ஒட்டுமொத்தக் காவல்துறையையும் ஈடுபடுத்தியாக வேண்டியிருக்கும். ஆகவே, கடந்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், எங்கெல்லாம் உள்ளாட்சி உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டார்களோ அங்கெல்லாம் "வட்டார ஆளுமை நடவடிக்கை" என்பதை பாதுகாப்புப் படையினர் தொடங்கினர். அந்த நடவடிக்கையின்கீழ் தீவிரமான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. முன்பு தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்கும் இதே போன்ற நடவடிக்கைதான் மேற்கொள்ளப்பட்டது. இந்த கிராமங்களிலிருந்து சில மாதங்களுக்கு முன்பாக பாதுகாப்புப் படையினர் வெளியேறினர். அதன்மூலம் இயல்பு நிலை திரும்பிவிட்டது என்ற செய்தி உரக்கச் சொல்லப்பட்டது.

"காஷ்மீர் பிரச்சனைக்குத் தேவைப்படுவது ஒரு அரசியல் தீர்வு. அதற்கும் உள்ளாட்சிகளுக்கும் சம்பந்தமில்லை," என்று இரண்டு பிரச்சனைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை அல்ல என்று காட்ட முயல்கிறார் சாகர்.

ஆனால், இந்த மாநிலத்தில் உள்ளாட்சிப் பிரச்சனை ஒரு அரசியல் போராட்டமாக ஏற்கனவே வளர்ச்சி அடைந்துவிட்டது. இதனால், தேசிய மாநாடு கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையேமான கூட்டு முறியக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உள்ளாட்சி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று குற்றம் சாட்டியுள்ள காங்கிரஸ் கட்சி, அவர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. அன்றைய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல்காந்தி, உள்ளாட்சி உறுப்பினர்களின் பிரதிநிதிக் குழு ஒன்றை கடந்த செப்டம்பரில் தில்லியில் வைத்து சந்தித்தார். பின்னர், ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் கோடைக்காலத் தலைநகரமாகிய ஸ்ரீநகரில் உயர்மட்ட அளவிலான ஒரு சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் உமர் அப்துல்லா சங்கடத்துக்கு உள்ளானவராக, ஒரு வார காலத்துக்குள் மூன்றடுக்கு உள்ளாட்சி முறையின் இரண்டாவது அடுக்காகிய வட்டார வளர்ச்சி மன்றங்களுக்கு (பிடிசி) தேர்தலை அறிவித்தார். அதற்கு அடுத்த வாரத்தில் மாநில சட்டமன்றத்தில் தீவிரவாத அச்சுறுத்தல்களின் விளைவுகள் குறித்து கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்க ஒவ்வொரு கட்சியும் ஒரு தீர்வை முன்வைத்தது.

இறுதியாக, முன்வைத்த காலை பின்வைத்த மாநில அரசு, ஒரு சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தி அதன் முடிவாக, வட்டார மேம்பாட்டு மன்றத் தேர்தலை காலவரையின்றித் தள்ளிப்போட்டது. இதனால், ஏற்கனவே நிலைகுலைந்து போயிருந்த உள்ளாட்சி உறுப்பினர்கள் இப்போது மேலும் அந்தரத்தில் நிற்க வேண்டிய நிலைமைக்கு உள்ளானார்கள். வட்டார வளர்ச்சி மன்றங்களில் பெண்களுக்கும் பட்டியல் சாதியினருக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு வழங்குவதற்காகவே தேர்தல் தள்ளி வைக்கப்படுவதாக அரசு காரணம் கூறியது. உள்ளாட்சி அதிகாரம் பற்றிய மாநில அரசின் தடபுடல் அறிவிப்பு இவ்வாறாக எதிர்மறையாக முடிவுக்கு வந்தது.

## நம்பிக்கை ஏற்படுத்திய தேர்தல்

1977ஆம் ஆண்டிற்குப் பிறகு மாநிலந்தழுவிய அளவில் நடந்த முதல் உள்ளாட்சித் தேர்தல் இதுதான். 2001ஆம் ஆண்டிலும் ஒரு உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. ஆனால், மாநிலத்தின் 50 சதவீத உள்ளாட்சிகளைக் கொண்டுள்ள காஷ்மீர் பகுதியில், அப்போது தீவிரவாதப் பிரச்சனையின் காரணமாக தேர்தல் நடத்தப்படவில்லை. அதன்பின் 2011 வரையில் உள்ளாட்சித் தேர்தல்களுக்கான அறிவிக்கையை அரசு வெளியிடவில்லை.

"வழக்கமான அரசியல் விவாதங்களிலிருந்து விலகி உள்ளூர் வளர்ச்சியில் கவனம் செலுத்த மக்கள் விரும்பினர். அரசுக்கும், நீண்டகாலமாக மறக்கப்பட்டிருந்த கிராமங்களுக்குமிடையே ஒரு இணைப்பாக ஊராட்சி அமைப்புகள் வந்தன," என்கிறார் ஜம்மு–காஷ்மீர் மாநில ஊரக மேம்பாட்டு ஆய்வு நிறுவன பேராசிரியர் சஹானவாஸ் ஆலம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளித்தவர் அவர். தேர்தல் நடைமுறைகளின்போது நடுவிலேயே, "ஃபட்வா" மிரட்டல்களை தீவிரவாதக் குழுக்கள் விலக்கிக் கொண்டன. அந்த அளவிற்கு மக்கள் உறுதியாக இருந்தார்கள்.

மக்களின் உணர்வு, தேர்ந்தெடுக்கப்பட பிரதிநிதிகளின் தன்மையையும் பிரதிபலிக்கிறது. சுமார் 60 சதவீத பிரதிநிதிகள் 50 வயதுக்கு உட்பட்டவர்கள். 25 ஆண்டுகாலமாக தீவிரவாத சவால்களுக்கு உள்ளாகி வந்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள். "நிர்வாகம் முற்றிலுமாக சீர்குலைந்து போயிருந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள். நிர்வாகத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக அவர்கள் தேர்தலில் போட்டியிட்டபோது மிகப் பெரும் அளவுக்கு மக்கள் ஆதரவு கிடைத்தது," என்கிறார் ஆலம்.

2011ம் ஆண்டின் ஊராட்சித் தேர்தல்கள் கட்சி சாராத அடிப்படையில் நடத்தப்பட்டன. "இது இளைஞர்களிடையே புதிய ஊராட்சிகளின் கவன முனைப்பு என்பது இனி உள்ளூர் மேம்பாடாக மட்டுமே

இருக்கும் என்ற எதிர்பார்ப்பை இளைஞர்களுக்கு ஏற்படுத்தியது,'' என்கிறார் அகில இந்திய உள்ளூர் தன்னாட்சி சங்க முன்னாள் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவருமான ஹாஜி அப்துல் கனி கான்.

தீவிரவாதிகளை உறுதியாக எதிர்த்து நின்றதற்கு ஒரு அடையாளமாக இருப்பவர் ஊராட்சித் தலைவர் பெய்க். "நான் வேட்பு மனு தாக்கல் செய்தபோது பல தீவிரவாதக் குழுக்களின் நிர்பந்தங்களை நான் சந்தித்த வேண்டியிருந்தது மற்ற வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்கள்,'' என்கிறார் பெய்க். அவர் போட்டியின்றி வெற்றி பெற்றார். "உள்ளூர் மேம்பாடு குறித்த எதிர்பார்ப்புகள் மிக அதிகமாக இருந்தன. நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மக்கள் என்னிடம் வந்து, கிராம மேம்பாட்டுக்கு முழு ஆதரவு தெரிவித்தார்கள்,'' என்றும் அவர் கூறுகிறார். உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு தீவிரவாத மிரட்டல் பின்தங்கிப் போனதை இது காட்டுகிறது.

நிதிப் பற்றாக்குறையுடன் இருந்த இந்த மாநிலத்திற்கு, மிகவும் தேவைப்பட்ட கருவூலத்திற்கான வழி இத்தேர்தலின் மூலம் திறந்துவிடப்பட்டது. ஊரக மேம்பாட்டுக்கான மத்திய அரசின் நிதி கிடைத்தது. இந்த நிதியின் பெரும் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் மூலமே கையாளப்பட வேண்டும் என்பதை மத்திய நிதி ஆணையம் உறுதிப்படுத்தியுள்ளது. 12வது நிதி ஆணையம் (2005 – 2010) மாநிலத்தின் ஊரகப் பகுதிகளுக்காக ரூ.281 கோடி ஒதுக்கியது. ஆனால், ஊராட்சிகள் இல்லாத நிலையில் மாநில அரசு இதில் ரூ.228 கோடியை இழக்க வேண்டியதாயிற்று. இப்போது 13வது நிதி ஆணையம் ரூ.918 கோடி ஒதுக்கியுள்ளது. இதில் ரூ.600 கோடி 2010 – 2015 ஆண்டுகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக வழங்கப்படும். இதில் பெரும்பகுதியை மாநில அரசு இழந்திருக்கிறது என்றாலும் முழு நிதியையும் இழந்துவிடவில்லை.

"13வது நிதி ஆணைய ஒதுக்கீட்டின்படி மத்திய அரசு வருடாந்திர நிதியாக ரூ.400 கோடி முதல் ரூ.500 கோடி வரை வழங்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். அந்த நிதியை உள்ளாட்சி அமைப்புகள் மாநிலம் முழுவதும் பயன்படுத்தும்,'' என்று மாநில முதலமைச்சர், உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடன் செய்தியாளர்களிடம் கூறினார். போதிய பிரதிநிதிகளும், பணமும் தயாராக இருந்த நிலையில் கிராமப்புற மேம்பாடு, ஜனநாயகம் குறித்த எதிர்பார்ப்புகள் கடந்த கோடை காலத்தில் மிகவும் அதிகரித்தன. ஆனால், ஒரே ஆண்டுக்குள் அந்த எதிர்பார்ப்புகள் அடங்கிப் போய்விட்டன.

### தீவிரவாதத்திற்கு அப்பாற்பட்ட அச்சுறுத்தல்:

"தற்போதைய நெருக்கடி தீவிரவாதிகளின் அச்சுறுத்தலால் ஏற்பட்டது என்பதைவிட, உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவதில் மாநில அரசு காட்டிய தயக்கத்தின் காரணமாகவே பெரிதும் ஏற்பட்டது,'' என்கிறார் ஜம்மு காஷ்மீர் ஊராட்சி மாநாடு என்ற அமைப்பின் அமைப்பாளர் ஷஃபீக் மிர். அதிகாரப் பரவலை வலியுறுத்துவதற்காக உருவான அமைப்பு இது. "தீவிரவாதிகளிடமிருந்து அச்சுறுத்தல் வருவதற்குப் பல நாட்கள் முன்பாகவே ஊராட்சிகளுக்கு மாநில அரசிடமிருந்து அச்சுறுத்தல் வந்துவிட்டது,'' என்கிறார் மிர்.

தேர்தல் முடிந்து ஓராண்டு காலம் ஆன பிறகும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க மாநில அரசுக்கு மனம் இல்லாததைக் கண்டித்து 2012, பிப்ரவரி 13 அன்று உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பேரணி ஒன்று ஸ்ரீநகரில் நடைபெற்றது. தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாப்பு என்பதைவிட உள்ளாட்சிகளுக்கு போதிய அதிகாரம் என்பதையே அவர்கள் கூடுதலாக வலியுறுத்துகிறார்கள். அக்டோபர் 1 அன்று, ஜம்மு காஷ்மீர் ஊராட்சித் தலைவர்கள் சங்கத்தின் தலைமையில் அனந்த் நாக் நகரில் கூடிய ஊராட்சித் தலைவர்கள் மாநில அரசு வாக்களித்தபடி உள்ளாட்சிகளுக்கு உரிய அதிகாரங்களை விரைவில் வழங்காவிட்டால், நாடாளுமன்றத்தின் முன்பாகக் கூடி ஒட்டுமொத்தமாக பதவி விலகுவது என்ற ஒரு தீர்மானத்தில் கையெழுத்திட்டார்கள்.

ஜம்மு காஷ்மீர் ஊராட்சி சட்டம் 1989ன் கீழ், பெருவாரியான திட்டங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அத்துடன், ஊராட்சி நடுவர் மன்ற அமைப்பின் கீழ், உரிமையியல் மனுக்கள் தொடர்பாக தீர்ப்பளிக்கும் அதிகாரம் உள்ளாட்சிகளுக்கு உண்டு ('கிராம நீதிபதிகள் இல்லை' என்ற பெட்டிச் செய்தியைப் பார்க்கவும்). சட்டத்தின்படி, தேர்தல் முடிந்தவுடனேயே மாநில அரசு 14 துறைகளுக்கான செயல்பாட்டு அதிகாரங்களையும், 16 மத்திய நிதியுடனான திட்டங்களையும் ஊராட்சிகளின் பொறுப்பில் ஒப்படைத்திருக்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் உள்ளிட்ட திட்டங்கள் இதில் அடங்கும். இந்நேரம் ஊராட்சிகள் ஆண்டுக்கு ரூ.1,000 கோடிக்கு மேற்பட்ட திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், மாநில அரசுக்கோ வேறு எண்ணம் இருந்ததாகத் தெரிகிறது. மாநில உள்ளாட்சி அமைப்பின் கீழ் கிராம ஊராட்சி, வட்டார மேம்பாட்டு மன்றம், மாவட்ட திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டு வாரியம் ஆகிய மூன்று

## கிராம நீதிபதிகள் இல்லை

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 50 ஆண்டுகளாக சமூக அடிப்படையிலான உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி வழங்கும் முறை பரிசோதனை செய்யப்பட்டு வந்துள்ளது. மாநில ஊராட்சி சட்டத்தின் கீழ் சமூகப் பங்கேற்புடன் கூடிய ஒரு கிராம நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டும். அவற்றில் நடுவர்களாக செயல்படக் கூடியவர்களின் பரிந்துரைப் பட்டியலை கிராம ஊராட்சிகள் அரசுக்கு அனுப்புகின்றன. அந்தப் பட்டியலிலிருந்து 5 பேரை ஐந்தாண்டு காலத்திற்கு அரசு தேர்வு செய்து நியமிக்கிறது. அந்த நியமன உறுப்பினர்கள் தங்களிடையே ஒருவரை நடுவர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். நடுவர் மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுகிறார்கள். எனினும், பாரபட்சமற்ற விசாரணைக்குப் பிறகு அவர்களில் யாரை வேண்டுமானாலும் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கிறது.

கிராம நடுவர் மன்றங்களைப் பொறுத்தவரையில் உரிமையியல் பிரச்சனைகளைவிட குற்றவியல் பிரச்சனைதான் அதிகமாக வருகின்றன. இப்படிப்பட்ட நடுவர் மன்றங்களுக்காக என 'ரன்பீர் தண்டனை விதிகள்' என்ற ஒரு சிறப்பு தண்டனைச் சட்டம் இந்த மாநிலத்தில் இருக்கிறது. ஆனால், அந்த மன்றங்கள் அதிகபட்சமாக ரூ.3,000 வரைதான் தண்டம் விதிக்க முடியும். நடுவர்மன்றங்களின் தீர்ப்புகளை எதிர்த்து வழக்கமான நீதிமன்ற அமைப்பின் கீழ் அமர்வு நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியும். தற்போது அப்படிப்பட்ட கிராம நடுவர் மன்றம் எதுவும் செயல்படவில்லை. ஊராட்சித் தேர்தல் முடிந்த மூன்று மாதங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் நடுவர் மன்ற நடுவர்களுக்கான பரிந்துரைப் பட்டியல்களை மாநில அரசுக்கு அனுப்பின. ஆனால், அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

அமைப்புகள் உள்ளன. வட்டார மேம்பாட்டு மன்றத்திற்கான உறுப்பினர்களை ஊராட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இரண்டு அமைப்புகளையும் சேர்ந்த உறுப்பினர்களிடையே இருந்து மாவட்ட வாரியத்திற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கிராம ஊராட்சிக்கான திட்டங்களை உருவாக்கி நிதி ஒதுக்குவது இந்த இரு அமைப்புகள்தான் என்பதால் இவை இரண்டும் முக்கியமானவை–யாகும்.

விசித்திரமான முறையில் தேர்தல் முடிவுடைகளை, மாநில அரசு கிட்டதட்ட மூன்று மாத காலமாக அறிவிக்காமலே வைத்திருந்தது. இதனால், ஊராட்சிமன்றங்கள் முறைப்படி பொறுப்பேற்பதும், வட்டார வளர்ச்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் தாமதமானது. கிராம ஊராட்சித் தேர்தல்கள் முடிந்த 45 நாட்களுக்குள் இது நடந்திருக்க வேண்டும். நிலைமையை மேலும் மோசமாக்குவது போல், மாநில அரசு வட்டார வளர்ச்சி மன்றத் தேர்தல்களை காலவறையின்றித் தள்ளிப்போட்டது. ''மூன்றடுக்கு முறை செயல்படாத நிலையில் ஊராட்சித் தலைவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை,'' என்கிறார் ஆலம். ''ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவதில் உண்மையிலேயே அரசுக்கு அரசியல் உறுதி இருக்கிறதா என்பதையே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது,'' என்றும் அவர் கூறுகிறார்.

மாநில அரசின் 14 துறைகள் தங்களுடைய செயல்பாடுகளை கிராம ஊராட்சிகளிடம் இன்னும் ஒப்படைக்கவில்லை. மாநில ஊராட்சி சட்டத்தின்படி, ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்ட உடனேயே ஊராட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தை வட்டார திட்ட அலுவலர்கள் கூட்டியிருக்க வேண்டும். ஆனால், இத்தகைய செயல்பாடுகள் ஒப்படைக்கப்படுவதற்கு பொறுப்பான கூடுதல் மாவட்ட மேம்பாட்டு ஆணையர்களுக்கு கடந்த ஜூலை மாதம் ஊரக மேம்பாட்டுத்துறை அனுப்பிய சுற்றறிக்கையின்படி, இத்தகைய கூட்டம் எதுவும் கூட்டப்படவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால் அதிகாரப் பரவலுக்கான முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது தான்.

வட்டார மன்றமும், மாவட்ட வாரியமும் இல்லாத நிலையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக என ஒதுக்கப்பட்ட நிதி எதுவும் கிராம ஊராட்சிகளிடம் இல்லாமல் போனது.

2011ம் ஆண்டில் நடந்த ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு மாநில அரசு இரண்டு பட்ஜெட்டுகளை தாக்கல் செய்துவிட்டது. ஆனால், அவற்றில் ஒரு பட்ஜெட்டில் கூட கிராம ஊராட்சிகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மாநில அரசுத்துறைகள் அனைத்து ஊராட்சி செயல்பாடுகளுக்குமான நிதியை தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கின்றன.

இது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு எதிரான அலையை கிளப்பிவிட்டது. ''இப்போது மக்கள், தீவிரவாதிகள் இருதரப்பினருமே எங்களைத் தாக்குகிறார்கள், எங்களைக் குறி வைக்கிறார்கள்,'' என்கிறார் மிர்.

உள்ளாட்சிகளுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படுவது தாமதமாவதால் ஏற்படும் சட்டம் ஒழுங்கு சிக்கல்கள் குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் பலமுறை மாநில அரசை எச்சரித்திருக்கிறது. கடந்த செப்டம்பர் முதல் வாரத்தில் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது:

“வட்டார குழுக்களையும் மாவட்ட மன்றங்களையும் அமைப்பதில் ஏற்படும் தாமதம், ஊராட்சித் தலைவர்களை அவர்களுக்குரிய அதிகாரம் இல்லாதவர்களாக ஆக்கியுள்ளது. அத்துடன் பள்ளத்தாக்கு பகுதியில் வேர்மட்ட அதிகாரம் வழங்கலை எதிர்க்கிற பயங்கரவாத அமைப்புகளின் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடியவர்களாகவும் ஊராட்சித் தலைவர்களை மாற்றியுள்ளது. அண்மைக் காலமாக ஊராட்சித் தலைவர்களைக் குறிவைத்துத் தொடுக்கப்படும் தாக்குதல்கள் அதிருப்தியை அதிகரிக்கச் செய்துள்ளன. அடுத்தடுத்து பலரை பதவி விலகச் செய்துள்ளன.”

ஊராட்சித் தலைவர்கள் தங்களுக்கு தீவிரவாதிகளிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களை விட தங்களது நம்பகத் தன்மை பாதிக்கப்படுவது குறித்தும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போவது குறித்துமே கவலைப்படுகிறார்கள். கடந்த செப்டம்பர் 28 அன்று தீவிரவாதிகள் செயல்படும் சோப்போர் பகுதியைச் சேர்ந்த வார்போரா கிராம ஊராட்சித் தலைவர் அஃரோஸ் அகமது வார், ஒரு விளம்பரத்தின் மூலமாக தனது பதவி விலகலை அறிவித்தார். “நான் பதவி விலகுவது தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் காரணமாக அல்ல. கடந்த 16 மாதங்களாக என்னால் ஊர் மக்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. எனது நம்பகத் தன்மையையும் இழக்க வேண்டியதாயிற்று என்று அவர் கூறுகிறார். தனது கிராமத்தில் குடிநீர் விநியோகத்தை விரைவுபடுத்தச் சொல்லி வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு மீண்டும் மீண்டும் சென்று வந்தது பற்றி குறிப்பிடும் வார், “அந்த அலுவலகத்திற்கு நான் 100 முறை சென்றிருக்கிறேன். ஆனால், ஒரு பலனும் கிடைக்கவில்லை. இந்த சோதனையில் நான் கைகழுவிக் கொள்வதற்கு ஒரு சாக்காக தீவிரவாதிகள் பற்றிய அச்சம் இருக்கிறது,” என்கிறார். ஜன்வாரா ஊராட்சித் தலைவர் அப்துல் ரஷீத் மிர், “பதவி விலகத் தயாராக இருக்கிறார். அவரும், “எனது இந்த முடிவுக்குக் காரணம் தீவிரவாதிகள் அல்ல,” என்றே கூறுகிறார். தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு அவர் ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் கிராமத்தில் சாலை கட்டுமானப் பணியைத் தொடங்கினார். கடந்த பல ஆண்டுகளில் முதல் முறையாக அந்த கிராமம் ஒரு சாலை மேம்பாட்டுப் பணி தொடங்கப்பட்டதைக் கண்டது. “ஆனால், ஆறு மாத காலமாக கூலி எதுவும் வழங்கப்படவில்லை,” என்கிறார் அப்துல் ரஷீத் மிர். சம்மந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்காக அவர் பல முறை வட்டார அலுவலகத்திற்கு சென்று வந்தார். அதனால், அவருக்கு பணமும் நேரமும் விரயமானது. கடந்த அக்டோபர் கடைசி வாரத்தில் அவர் இறுதியாக பொது சுகாதாரத் துறை பொறியாளர் ஒருவரை அவர் சந்தித்தார். கூலிகளை வழங்குவதற்கு அவருடைய கையெழுத்து தேவைப்பட்டது. “அந்த அதிகாரியோ என்னிடம் நீங்கள் ஏன் பதவி விலகக் கூடாது? அப்படி விலகினால் நீங்கள் சுதந்திரமாக இருக்கலாமே என்று கூறினார்,” என்று அப்துல் ரஷீத் மிர் தெரிவித்தார். இன்று அவர் தமது ஆப்பிள் தோட்டத்திலேயே முழு நேரமும் இயங்கிக்கொண்டிருக்கிறார்.

இதேபோன்றுதான் ஊராட்சிகளின் அடிப்படை உள்கட்டுமான நிலைமைகளும் உள்ளன. மொத்தமுள்ள 4,128 ஊராட்சிகளில் 1,788ல் மட்டுமே அலுவலகம் உள்ளது. “நாங்கள் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டியதாகிறது. எங்களைச் சந்திக்க அரசாங்க அதிகாரிகள் வருவதில்லை. எங்களைச் சந்திப்பதற்கு இடம் இல்லை என்று காரணம் கூறுகிறார்கள்,” என்கிறார் ஹாட்லாங்கூ கிராம ஊராட்சி உறுப்பினர் ரியாஸ் அகமது பாபா. மாதம் ரூ.600 வாடகையில் ஊராட்சி மன்றத்திற்கு இடம் ஏற்பாடு செய்துகொள்ள சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வாடகைப் பணம் அரசாங்கத்திடமிருந்து வருவதில்லை என்று பல உறுப்பினர்களும் தெரிவிக்கிறார்கள். அண்மையில் மாநில அரசு பின்தங்கிய வட்டார நிதியிலிருந்தும் ஊரக



வேலைச் சட்ட நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கியது. ஆனால், இதற்கான நிலம் திட்டவட்டமான முறையில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பல்வேறு ஊராட்சிகள் வருவாய்த்துறையின் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருக்கிறது.

## அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள யாருக்கும் விருப்பமில்லை:

30 ஆண்டுகளாக உள்ளாட்சிகள் இல்லாத நிலையில், மாவட்ட திட்டவாரியம் என்ற ஒன்றை மாநில அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த வாரியம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. இந்த வாரியம் இப்போது மாவட்ட திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டு வாரியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. கட்சி சாராத அடிப்படையில் ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து தங்களுடைய செல்வாக்கு சரிவதைப் பார்த்த அரசியல் கட்சிகள் எத்தனை கிராமங்களை தங்களது பிடிப்பில் கொண்டுவர முடியுமோ அத்தனை கிராமங்களைக் கொண்டுவர முயன்றன. சம்மந்தப்பட்ட கட்சியின் மையமான நபர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்படத் தொடங்கினர். ஊராட்சி உறுப்பினர்கள் தங்களோடு ஒத்துப் போக வேண்டும் அல்லது பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் கெடுபிடி செய்யலானார்கள். இன்று ஊராட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையேயான ஆழமான தொடர்புகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

“கிராம மேம்பாட்டுத் திட்டங்களுடன் நான் அதிகாரிகளைச் சந்திக்கிறபோதெல்லாம் அவர்கள் இதற்கு முன் நடந்தது போல சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையோடு வருமாறு கட்டாயப்படுத்துகிறார்கள்,” என்கிறார் ஹாட்லாங்கூ ஊராட்சித் தலைவர் அலி முகமது லோன். சட்டமன்ற உறுப்பினரைச் சென்று பார்த்தபோது அவர் தனது கட்சிக்காரர்களின் நலன்தான் முக்கியம் என்று சொல்லியிருக்கிறார். எந்த ஒரு மேம்பாட்டுப் பணியையும் அலி முகமது லோன் செயல்படுத்த முடியவில்லை. அந்த சட்டமன்ற உறுப்பினரை திருப்திபடுத்துவதற்காக கட்சி மாறலாமா என்று முகமது லோன் யோசித்துக்கொண்டிருக்கிறார்.

“எங்கள் மாநிலத்தில் நிலைபெற்றுள்ள எம்எல்ஏ ராஜ்ஜியத்திற்கு உள்ளாட்சித் தலைவர்கள் ஒரு சவாலாக வந்திருப்பதாக கருதப்படுகிறார்கள்,” என்கிறார் மிர். மாநில முதலமைச்சரும் கூட இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். “எம்எல்ஏக்கள் தங்களது அதிகாரம் சுருங்குவதை விரும்பவில்லை. அவர்கள்தான் ஊராட்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்கள்,” என்றார் அவர். அக்டோபர் 8 அன்று நடந்த சட்டமன்ற கூட்டத்தில், முன்னாள் துணை முதலமைச்சரும் எதிர்கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சியானத் தலைவருமான முசாபர் ஹுசெய்ன் பெய்க்,“தீவிரவாதத்திற்கும் அப்பால் அரசியல் சூழ்ச்சிகள் இருக்கின்றன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன,” என்று குற்றம் சாட்டினார்.

வட்டார வளர்ச்சிமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபோது (தற்போது அது தள்ளிப் போடப்பட்டுவிட்டது), ஊராட்சி உறுப்பினர்களை தங்கள் பக்கம் இழுத்துக்கொள்வதற்கான வேட்டையை அரசியல் கட்சிகள் தொடங்கின. மன்றத்தின் தலைவராக யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்ற போதிலும் கூட அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது ஊராட்சி உறுப்பினர்கள்தான். வட்டாரத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பட்ஜெட்டில் தாக்கம் செலுத்துவதற்காக, அந்த பதவிக்கு பொதுவாக அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை நிறுத்துகின்றன. “வாக்காளர்களுக்கான புதிய தளங்களாக ஊராட்சிகள் மாறின. அந்த வாக்காளர்களை ஊராட்சித் தலைவர்கள் மூலம் கவரலாம் என்ற நிலை ஏற்பட்டது. 2014ல்



நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு அந்த உறுப்பினர்களையும் தலைவர்களையும் கவரும் வேலையை அரசியல் கட்சிகள் தொடங்கிவிட்டன,'' என்று மாநில அரசின் உயர்நிலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆளும் கூட்டணிக்கும் மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இடையேதான் தீவிரமான போட்டி நடக்கிறது. இரண்டு கட்சிகளுமே தங்களுக்குத்தான் பெரும்பாலான ஊராட்சி உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது என்று கூறிக்கொள்கின்றன. ''காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள 17,960 ஊராட்சி உறுப்பினர்களில் 8,600 பேர் மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்,'' என்கிறார் பெய்க். ஆனால், மாநில ஊராட்சி சட்டத்தின்படி, வட்டார வளர்ச்சி மன்றம், மாவட்ட திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் தலைவர்கள் போன்ற முக்கிய பதவிகளில் அரசாங்கம் தனது ஆட்களை நியமிக்க முடியும். ஆளும் கூட்டணியைச் சேர்ந்த தேசிய மாநாடு கட்சியைத் தவிர்த்து மற்ற அனைத்து அரசியல் கட்சிகளும், அரசாங்கத்தின் தலையீட்டிலிருந்து ஊராட்சிகளை விடுவிக்க இந்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதில் வியப்பில்லைதான்.

உள்ளாட்சிகளின் அனைத்து அடுக்குகளுக்கு, நேரடித் தேர்தல் நடத்துவதையும், அவற்றின் தன்னாட்சியையும் உறுதிப்படுத்துகிற 73வது அரசமைப்பு சாசன சட்டத்திருத்தத்தை மாநிலம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. தேசிய மாநாடு கட்சியினரும் குறிப்பாக முதலமைச்சரும் இதை வன்மையாக எதிர்க்கின்றனர். இந்த சட்டத்திருத்தம் அரசமைப்பு சாசனத்தின் 370வது பிரிவின்கீழ் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள தன்னாட்சியை மீறுவதாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆளும் கூட்டணியின் கூட்டாளிகளிடையே இது ஒரு முக்கியமானப் பிரச்சனையாக வந்துள்ளது. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தரையில் 1996ம் ஆண்டின் சட்டமன்ற தேர்தலில் இருந்தே, மாநிலத்தில் மத்திய உள்ளாட்சி சட்டம் செயல்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்து வந்திருக்கிறது. ''மாநிலத்தின் உள்ளாட்சிகளுக்கு போதிய அதிகாரம் வழங்க 73வது சட்டத்திருத்தம் ஏற்கப்பட்டாக வேண்டும்,'' என்று மாநில காங்கிரஸ் தலைவர் சைபுதீன் சோஸ் கூறுகிறார்.

மக்கள் ஜனநாயகக் கட்சி இந்த சட்டத்திருத்தத்தை எதிர்கிறது என்றாலும், இதுபோன்ற திருத்தங்கள் மாநில சட்டத்தில் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன் வைத்திருக்கிறது. அதற்காக ஒரு தனி நபர் ஊராட்சி சட்டமுன்வரைவை தாக்கல் செய்யலாம் என்கிறது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் முகமது யூசுப் தாரிகாமி, ஒரு தனிநபர் சட்ட முன்வரைவை தாக்கல் செய்துள்ளார். மாவட்ட வாரியத்தின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் ஊராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்க வகை செய்யும் சட்ட முன்வரைவு அது. மத்தியில் எதிர்கட்சியாக உள்ள பாரதீய ஜனதா கட்சி அரசமைப்பு சாசன 73வது சட்டத்திருத்தத்தை ஏற்க வேண்டும் என்கிறது. கடந்த ஐந்து மாதங்களாக ஊராட்சி உறுப்பினர்களும், 73வது சட்டத்திருத்தம் ஏற்கப்பட வேண்டும் என்று கோரி வருகிறார். அந்தச் சட்டத்திருத்தம் மாநில சுயாட்சியை மீறுவதாக இருக்காது, ஏனென்றால் மாநில அரசு ஏற்கெனவே பல மத்திய சட்டங்களை ஏற்றுள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள். ''முதல் முறையாக இப்போதுதான் ஒரு மத்திய சட்டத்திற்கு இப்படிப்பட்ட உள்ளூர் ஆதரவு கிடைத்திருக்கிறது. இந்த சட்டத்திருத்தம் உள்ளாட்சி உறுப்பினர்களை தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்க உதவும்,'' என்கிறார் மிர்.

**தவறான சட்டமும் மாநிலத்தின் பிடிவாதமும்:**

1992ல் மத்திய பஞ்சாயத்து ராஜ்சட்டம் வருவதற்கு முன்பாக இந்த மாநிலத்தில் கொண்டுவரப்பட்டுவிட்ட உள்ளாட்சி முறையில் அனைத்து மட்டங்களிலும் அரசாங்கம் ஆதிக்கம் செலுத்துகிறது. மத்திய சட்டத்தைப் போல அல்லாமல் மாநில சட்டம் கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே நேரடித் தேர்தலை நடத்தவும், வட்டார, மாவட்ட மன்றங்களுக்கு மறைமுகத் தேர்தலை நடத்தவும் வழி செய்கிறது. வட்டார, மாவட்ட மன்றங்கள் இரண்டிலுமே மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடையாது. ஆயினும், முடிவுகள் எடுப்பதில் இந்த அமைப்புகளுக்கு அதிகபட்ச அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, மாவட்ட வாரியத்தில் தலைவரை நியமிப்பது அரசாங்கம்தான். பொதுவாக அந்தப் பதவியில் ஒரு அமைச்சர் அல்லது எம்எல்ஏ நியமிக்கப்படுகிறார். ''நடைமுறையின்படி, வாரியத்தின் கூட்டத்தில் முதலமைச்சர் உள்ளிட்ட மூத்த அமைச்சர்களும் மூத்த அதிகாரிகளும் கலந்துகொள்கிறார்கள்,'' என்கிறார் ஜம்மு பல்கலைக் கழகத்தின் அரசியல் ஆய்வாளர் ரேகா சவுதாரி. ''இவர்களெல்லாம் கலந்துகொள்வதால் மாவட்ட வாரியம், அரசாங்கத்தின் கட்டுப்பாடோ தலையீடோ இல்லாத ஒரு ஜனநாயக அமைப்பாக செயல்பட முடிவதில்லை,'' என்கிறார் அவர்.

எவ்வித பங்களிப்பும் இல்லாத துணைத் தலைவர் மறைமுகமாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறார். ''தற்போதைய நிலையில் அரசாங்கத்தின் ஒரு வாலாகவே மாவட்ட வாரியம் இருக்கிறது,'' என்கிறார் பெய்க். இவையல்லாது மூன்று அடுக்குகளிலுமே அரசு அதிகாரிகள்தான் செயலாளர்களாக இருக்கிறார்கள்.

| | அரசமைப்பு சாசன 73வது திருத்தம் | ஜம்மு காஷ்மீர் சட்டம் |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | அரசுத் துறையின் 29 செயல்பாடுகள் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன. | 11 செயல்பாடுகள் தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்படுவது பற்றி திட்டவட்டமாக எதுவும் இல்லை. |
| **தேர்தல்கள்** | உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து அடுக்குகளுக்கும் நேரடித் தேர்தல் நடத்துவதை கட்டாயமாக்குகிறது. | கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே நேரடித் தேர்தல் |
| **நிர்வாக ஏற்பாடு** | தொடர்ச்சியாக தேர்தல் நடத்துவதற்காக மாநில தேர்தல் ஆணையம் அமைக்கப்படுவதை | மாநில ஆணையம் எதுவும் கிடையாது. இதனால் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படுவது நிச்சயமற்றதாக |
| **அரசாங்கத் தலையீடு** | உள்ளாட்சி அமைப்புகளுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. | மாநில அரசு எத்தனை பேர் தேவை என்று கருதுகிறதோ அத்தனை உறுப்பினர்களை நியமித்துக்கொள்ளலாம். |

அனைத்து நிதி அதிகாரங்களையும் அவர்கள்தான் கட்டுப்படுத்துகிறார்கள். “உள்ளாட்சிகளின் சுயநிர்வாகத்தில் இது ஒரு விநோதமான ஏற்பாடாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைவிட அதிகமான அதிகாரம் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது,” என்கிறார் ஆலம். மத்திய சட்டம் நிறைவேற்றப்படுவமானால் இவ்வாறு நியமிக்கப்படுவதையும், மறைமுக தேர்தலையும் இந்த மாநிலம் விட்டொழிக்கும் நிலை ஏற்படும்.

2011ல் ஊராட்சித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, தலைமைச் செயலர் மாதவ் லால் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை அரசாங்கம் நியமித்தது. உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கான நடைமுறைகளை பரிந்துரைப்பதற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் நியமன ஏற்பாடுகளை ஒழித்துக்கட்ட அந்தக் குழு பரிந்துரைத்தது என்றாலும், அது 2016ல் தேர்ந்தெடுக்கப்படவுள்ள அடுத்த ஊராட்சிமன்றங்களுக்குத்தான் பொருந்தும் என்று கூறியிருக்கிறது. உள்ளாட்சி அதிகாரங்களை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்ளாட்சி ஒருங்கிணைப்புக் குழுவின் பொதுச் செயலாளர் அனில் சர்மா, “வட்டார வளர்ச்சி மன்ற தேர்தல்களில் ஊராட்சி உறுப்பினர்களும் தலைவர்களும் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இது வட்டார மன்ற அமைப்பில் வெளி சக்திகள் ஆதிக்கம் செலுத்துவதை விட்டொழிக்க உதவும்,” என்று கூறுகிறார்.

மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதி ஆணையம் ஆகிய அமைப்புகளை ஏற்படுத்த 73வது சட்டத்திருத்தம் பரிந்துரைக்கிறது. இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளரின் ஆய்வுக்கு உள்ளாட்சிகளின் கணக்குகள் உட்படுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரையையும் 73வது சட்டத்திருத்தம் கூறுகிறது. இத்தகைய சட்டப்பூர்வ அமைப்புகள் உள்ளாட்சிகளை அரசாங்கம் தான்தோன்றித் தனமாக கையாளக் கூடிய வாய்ப்பைக் கட்டுப்படுத்துகிறது. மாநில அரசு அண்மையில் ஒரு நிதி ஆணையத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அந்த ஆணையம் 73வது சட்டத்திருத்தத்திற்கு இணங்க அமைக்கப்படவில்லை. மாவட்ட மன்றத்திற்கு நிதி அதிகாரம் வழங்குகிற இந்த ஆணையம், கிராம ஊராட்சிகள் குறித்து மௌனம் சாதிக்கிறது. இந்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டால் அது கிராம ஊராட்சிகளுக்கு நிதி உத்தரவாதத்தை வழங்கும். அதேபோல், மாநில தேர்தல் ஆணையம் என்பது ஜம்மு காஷ்மீரில் கிடையாது. அது இல்லாத நிலையில், தேர்தலை எப்போது நடத்துவது தொடர்பான ஏகபோக அதிகாரத்தை அரசாங்கம் தனது கையிலேயே எடுத்துக்கொண்டுள்ளது. 2006 முதல் ஐந்து ஆண்டுகளாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி என்பது இல்லாமல் இருந்தது. “73வது சட்டத்தின் மூலம் பல்வேறு மத்திய ஏற்பாடுகள் வருகின்றன. அதற்கெல்லாம் மாநில அரசு பொறுப்பேற்றாக வேண்டும். அதனால்தான், இந்த அளவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது,” என்று அரசுச் செயலர் ஒருவர் கூறுகிறார்.

இந்த மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் வரலாறு எப்படி ஆரோக்கியமற்றதாக இருக்கிறது என்பதற்கு வாழும் உதாரணமாக இருப்பவர்தான் போட்டிங்கூ கிராமத்தின் ஊராட்சித் தலைவரான 68 வயது அப்துல் கலீக். பிரிவினைவாத தலைவர் அப்துல் கனி பாட்–ன் சொந்த ஊர் அது. 1971ம் ஆண்டிலும் தலைவராக இருந்தவர் அப்துல் கலீக். “சட்டப்படி அப்போது எங்களுக்கு பெரிய வேலை எதுவும் இருந்ததில்லை. இப்போது வேலை இருக்கிறது ஆனால் அவற்றை

நிறைவேற்ற முடியாத நிலையில் நான் இருக்கிறேன்,'' என்கிறார் அவர். மாநிலம் முழுவதுமே இப்படிப்பட்ட செயலற்ற நிலை குறித்த வேதனை ஊராட்சித் தலைவர்களிடையே பரவலாக இருக்கிறது. அவர்களோடு உரையாடும்போது 1987ல் தில்லுமுல்லுகளோடு நடத்தப்பட்ட மாநில சட்டமன்றத் தேர்தலைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். காஷ்மீரில் வரலாற்றில் அந்தத் தேர்தல் திருப்புமுனையாக அமைந்தது. அதில் வெற்றி பெற்ற பலர் தோல்வி அடைந்ததாக மோசடியான முறையில் அறிவிக்கப்பட்டது. இன்று அவர்களில் பலர் முக்கிய பிரிவினைவாத தலைவர்களாக இருக்கிறார்கள். ''ஊராட்சித் தலைவர்கள் விஷயத்தில் அரசாங்கத்தின் இன்றைய அணுகுமுறை அதேபோன்ற நிலைமையைத்தான் ஏற்படுத்துகிறது,'' என்று, மீண்டும் தீவிரவாத நடவடிக்கைகள் தலை தூக்கியிருப்பதை சுட்டிக்காட்டிக் கூறுகிறார் மிர்.

அக்டோபர் 17 அன்று கூடிய ஊராட்சி பிரதிநிதிகள் நவம்பர் மாதத்திற்குள் மூன்று அடுக்கு உள்ளாட்சி முறையை ஏற்படுத்தியாக வேண்டுமென்று அரசாங்கத்திற்கு கெடு நிர்ணயித்தனர். 1987ம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தலைப் போல் அல்லாது, 2011ன் ஊராட்சித் தேர்தல்களில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மக்கள் பங்கேற்றார்கள். இது ஒன்றும் சுயநிர்ணயித்திற்கான வாக்குப் பதிவு அல்ல, மாறாக அரசமைப்பு சட்டப்படி சுய நிர்வாகத்திற்கான வாக்குப்பதிவுதான். எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கேட்டபோது தயக்கத்தோடு அப்துல் கலீக் இவ்வாறு கூறுகிறார்: ''கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யக் கூடாது என எங்களது மூத்தோர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.''

**ஆதாரம்: Down to Earth. November 16-30, 2012**

# வேலை உறுதி திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள்

## சிறப்பு பணி நிர்ணயித்து அரசாணை வெளியீடு

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் ஈடுபடுத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள் மற்றும் கால அளவை நிர்ணயித்து, அரசாணை வெளியிடப்பட்டது.

**அரசாணையில் கூறியிருப்பதாவது:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், மாற்றுத் திறனாளிகளை சேர்க்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இவர்களின் தகுதிக்கேற்ப பணி, வேலை அளவு, நேரம் இவற்றை கணக்கிட, கோவை, மதுரை, திருநெல்வேலி, காஞ்சிபுரம் ஆகிய நான்கு ஒன்றியங்களில், தலா ஒரு ஊராட்சியில் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பணி பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளது.

**4 மணி நேர பணி**

- நேரம் மற்றும் சாதாரண பணியாளர்களின் பணி அளவை கொண்டு, இவர்களின் பணியை கணக்கிடக் கூடாது.
- மண் வேலையை பொறுத்தவரைது உடற்தகுதியுள்ள பணியாளர்கள் செய்வதில், 50 சதவீதம் மட்டுமே மாற்றுத் திறனாளிகளால் செய்ய முடியும்.
- நான்கு மணி நேரம் மட்டுமே பணிபுரிய முடியும்.
- தினக்கூலியாக, 132 ரூபாய் வழங்க வேண்டும்.

பணி இடத்தில், வேலை செய்பவர்களுக்கு குடிநீர் வழங்குதல்; அவர்களின் குழந்தைகளை பேணி காத்தல்; பணிதள பொறுப்பாளர் முன் அளவீடு செய்யும்போது உதவி செய்தல் உள்ளிட்ட சிறப்பு பணிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு வரையறுக்கப்பட்டு உள்ளன. பணி தளத்தில் வெட்டப்பட்ட முட்புதர்களை அகற்றுதல்; சிறு கடப்பாறை, மண்வெட்டி ஆகியவை கொண்டு, கரையை பலப்படுத்துதல்; நிலத்தை சமன் செய்தல் போன்றவையும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. உடல் உழைப்பு செய்யும் மாற்றுத் திறனாளிகளை, முட்புதர்களை அகற்றுதல், தூர் வாருதல், குழி எடுத்தல், மரக்கன்று நடுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுத்தலாம்.

**மருத்துவ வசதி**

இவர்களுக்கு, அடையாள அட்டை வழங்குதல், வங்கி கணக்கு துவங்குதல் உள்ளிட்ட பணிகளை, நிறைவு செய்ய வேண்டும். பணியிடத்தில், மருத்துவ வசதி, தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை, உரிய முறையில் ஏற்படுத்தி தர வேண்டும். இவ்வாறு, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதாரம்: தினமலர், 21.7.12**

# பலனளிக்காத வேலைத் திட்டம்: மாற்றம் தேவை

– ஜி. கிருஷ்ணசாமி

தற்போது மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வரும், 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்' தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின்படி, 2006ம் ஆண்டு, ஜூன் மாதம் துவங்கப்பட்டு, நாடு தழுவிய அளவில், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, புதிய குளங்கள் வெட்டுதல், பழைய குளங்களில் தூர் வாருதல், கால்வாய்கள், ஓடைகளில் தூர் வாருதல், செம்மைப்படுத்துதல், புதிய சாலைகள் அமைத்தல், காடுகள் அமைத்தல், காடுகள் வளர்த்தல், தரிசு நிலங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும், காடு வளர்ப்பு, தரிசு நில மேம்பாடு தவிர்த்து, மற்ற வேலைகள், அரைத்த மாவையே, திரும்பத் திரும்ப அரைப்பது போல் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து கிராமங்களிலும் கிராம சபைகள் அமைக்கும் பணி, முற்றிலுமாக நிறைவேற்றப்படவில்லை. ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பணிகள், செம்மையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதும், புதிய செயல் திட்டங்களைத் திட்ட அலுவலருக்குப் பரிந்துரை செய்யவுமே, கிராம சபைகள் அமைப்பதன் நோக்கமாக இருந்தது.

இது சரிவர நிறைவேற்றப்படாததால், எல்லா கிராமங்களிலும், புதிய பணிகள் துவங்கப்படாமல், செய்து முடிக்கப்பட்ட பணிகளோடு திருப்தியடைந்து, கிராமப்புற மக்கள் சோம்பிக்கிடக்கும் நிலை உருவாகி உள்ளது. வேலை செய்யாமலே கூலி வழங்கப்படுவதால், விவசாய வேலைகள் முற்றிலுமாக முடங்கிப் போயுள்ளன. விவசாயிகள், தம் சொந்த நிலத்தில் பாடுபடுவதை விட்டு விட்டு கூலிக்கு மாரடிப்பது போல், ஊரக வேலை உறுதித் திட்டத்தில் சேர்ந்து உழைக்காமல் பணம் சம்பாதித்து பயனடைந்து வருகின்றனர்.

கிராமப்புறங்களில் பெரும்பாலான மக்கள் சிறு, குறு விவசாயிகளாக இருப்பதைக் கருத்தில் கொள்ளாமல், அனைத்து கிராம மக்களும் நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் என முடிவு செய்து யதார்த்த நிலைக்கு மாறாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவது, அரசுகளுக்குத் தெரியாமல் போனதுதான் ஆச்சர்யமாகவும், வேதனையளிப்பதாகவும் உள்ளது. மேலும், இத்திட்டத்தில் பல குறைபாடுகளும், ஊழலும், மலிந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும், குறைபாடு, ஊழல்களை முற்றிலுமாகக் களைய போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பது, மத்திய, மாநில் அரசுகளின் மெத்தனப் போக்கைக் காட்டுவதாகத் தான் இருக்கிறது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், 100 சகவீதம் பயன் தரும் வகையில் நிறைவேற்றப்பட, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் காலம் தாழ்த்தாது, உடனடியாக மேற்கொள்ள வேண்டும். முதலில் அரசுக்கும், திட்ட அலுவலருக்கும், பஞ்சாயத்துகளுக்கும், தகுந்த ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குவதற்கு ஏற்றாற்போல், அனைத்து கிராமங்களிலும், கிராம சபைகள் அமைக்கப்பட வேண்டும்.

கிராம மக்களுக்குத் தான், அவர்களுக்கு என்ன தேவை என்பது தெரியும். ஏனவே, கிராம சபைகளின்றி செயல்படுத்தப்படும் எந்தத் திட்டமும், கிராமப்புற மக்களுக்கு முழுமையான பலனைத் தராது. ஓடைகள், கால்வாய்களில் தூர் வாருதல், குளங்கள், வெட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகியவற்றால் மட்டுமே, கிராம மறுமலர்ச்சியைக் காணலாம் என்பது, வெறும் பகற்கனவு.

ஒருங்கிணைந்த விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களைத் துவங்கி, அதற்கான உள்கட்டமைப்பு பொருட்களை லாபகரமான விலைக்குச் சந்தைப்படுத்துவதில் தான், கிராம மறுமலர்ச்சியைக் காண முடியும். கிராமப்புற பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை அம்சங்களான, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, கைத்தொழில்கள் போன்றவற்றைச் செயல்படுத்துவதால் மட்டுமே, உண்மையான ஊரக வளர்ச்சியை உறுதிப்படுத்த இயலும்.

எனவே, அனைத்து கிராமங்களையும், ஒன்றியங்கள் வாரியாக ஒருங்கிணைத்து, கோழி, மாடு, ஆட்டுப் பண்ணைகளை, அனைத்து கிராமங்களிலும் அமைக்க வேண்டும். அத்துடன் முட்டை, பால் உற்பத்தியை மேம்படுத்தும் விதத்தில், மாவட்டம் தோறும் முட்டை வாரியங்கள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாரியங்கள், கிராமப்புறங்களில் விவசாயிகளிடமிருந்து முட்டைகளை விலைக்கு வாங்கி, விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இதனால், ஒவ்வொரு விவசாயியும் பயனடைவான். அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் மாட்டுப் பண்ணைகள் அமைக்க, மாநில அரசு கால்நடைதுறை அலுவலர்களின்

உதவியோடு, மேற்கொள்ள வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பாலை, ஆவின் மூலம் சந்தைப்படுத்த, முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால், நாட்டில் பால் உற்பத்தி பெருகுவதோடு, பொது மக்களும் பயனடைய முடியும். கிராமப்புற மக்களின் பொருளாதாரமும் உறுதி செய்யப்படும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பயன்தரும் வகையில் செயல்படுத்தப்பட, வேளாண் துறை மற்றும் கால்நடைத்துறை அலுவலர்களின் முழு ஒத்துழைப்பு இருந்தால் தவிர, எவ்வகையிலும் பயன் தராது என்பதை, மத்திய, மாநில அரசுகள் உணர வேண்டும்.

மாநில அரசு தரிசு நிலங்கள் பற்றிய விவரங்களை, உடனடியாகத் தயார் செய்து, அந்நிலங்களில் பலன் தரும் மரங்களை நட்டு, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் காடு வளர்ப்பில் ஈடுபட வேண்டும். இதனால் மழை நன்கு பெய்வதோடு, நாட்டின் பொருளாதாரமும் உயரும்.

பழ மரங்கள், தேக்கு போன்ற கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படும் மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம், அரசுக்குக் கணிசமான வருமானம் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

மழைநீர் பற்றாக்குறையால் அவதிப்படும் விவசாயிகள் பயனடையும் வகையில், சொட்டுநீர் பாசன வசதி, அனைத்து கிராமங்களிலும் செய்து தரப்பட வேண்டும். இதன்மூலம் பழ மரங்கள், காட்டு மரங்கள், மூலிகைச் செடிகள், வாசனைச் செடிகள் ஆகியவை பயிரிடப்பட்டு, நல்ல ஆதாயம் பெற வாய்ப்பு உண்டாகும்.

நீர் மற்றும மின்சாரம் பற்றாக்குறையால், விவசாயம் அழிந்து வரும்இன்றை சூழலில், தேவையற்ற வேலைகளைச் செய்து மனித உழைப்பைப் பாழ்படுத்தியும், பணத்தை வீண்விரயம் செய்வதிலும்தொடர்ந்து மத்திய மாநில அரசுகள் ஈடுபட்டு வருவதைக் கைவிட்டு, கிராமப்புற மக்கள் குறிப்பாக இளைஞர்கள், நீண்ட கால அடிப்படையில் பயனடையும் வகையில், மாற்றுத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றைச் செயல்படுத்துதல் வேண்டும். நகர்புறங்களில் நிறுவப்பட்டுள்ள, தொடர்ந்து நிறுவப்பட்டு வரும் பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளில், தயாரிக்கப்பட்டு வரும் பொருட்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் தயாரிக்கும் சிறு தொழிலகங்களையோ அல்லது கிராமப்புற மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே தயாரிப்பதற்க ஏதுவாக அரசு வசதிகளைச் செய்து தர வேண்டும். இதனால் கிராமப்புற மக்கள், தொய்வின்றி பணம் சம்பாதிக்க வேண்டும்.

மேலும், கிராமப்புறங்களில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு, உதாரணத்திற்கு தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும், வேம்பும், புளியும் அபரிமிதமாகக் கிடைப்பதால், அவற்றைக் கொண்டு சோப்பு தயாரித்தல், உரம் தயாரித்தல் போன்ற தொழில்களைத் துவங்க முடியும்.

உற்பத்தித் திறன் கொண்ட தொழில்களைத் துவங்கி, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைளில் ஈடுபவடிம வு’மமு, லாபகரமான தொழிலாக ஆக்குவதை விடுத்து, மக்கள் வரிப் பணத்தை வீண் விரயம் செய்ய மட்டுமே பயன்படும் ஊரக வேலை உறுதித் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அதற்குப் பதில் மேலே கூறிய பயனுள்ள அம்சங்களையும் சேர்த்து செயல்படுத்தினால் மட்டுமே, கிராமப்புற மக்கள் முழுப் பலனையும் அடைவர். அதுவரை இத்திட்டத்தால் எவ்வித பலனும் இல்லை.

**Email: Krishna_samy2010@yahoo.com**

**ஆதாரம்: தினமலர், 26.8.12**

## ஆக்கிரமிப்புகளை அகற்ற கிராம சபையில் தீர்மானம்

**ஸ்ரீபெரும்புதூர்:** "நீர்நிலை மற்றும் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்'' என திருமங்கலம் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமங்கலம் ஊராட்சியில், கிராம சபை கூட்டம், ஊராட்சித் தலைவர் வித்யாகுமாரி ஸ்ரீதர் தலைமையில் நடந்தது. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சாரங்கி திருமால், பார்வையாளராக கலந்து கொண்டார்.

கூட்டத்தில் ஊராட்சிக்குட்பட்ட சுங்குவார்சத்திரம் செல்வ விநாயகர் கோவில் குளம் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கி உள்ளது. கோவில் குளத்தில் கழிவு நீர் கலந்து மாசு ஏற்பட்டுள்ளது. இதனால், தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே, குளத்தை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற பரிந்துரையின்படி, வட்டாட்சியர் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மொளச்சூர் கிராமத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர், திருமங்கலம் கிராம ஏரியில் கலப்பதை தடுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆதாரம்: தினமலர், 28.1.13**

# இந்தியாவில் தகவல் உரிமைச் சட்டம்

## நடைமுறை பற்றிய ஒரு ஆய்வு

– ஜி. பழனிதுரை
– ஆர். ரமேஷ்

2005ஆம் ஆண்டில் தகவல் உரிமைச் சட்டம் (ஆர்.டி.ஐ.) சமூக நீதியை நிலை நாட்டுவதில் கிராம ஊராட்சிகளுக்கு உண்மையிலேயே ஒரு வலுவான ஆயுதமாக வந்துள்ளது. சோம்பேறித்தனமான அரசு எந்திரத்தைச் செயல்பட வைக்க இந்தச் சட்டம் உதவுகிறது. சந்தை நிலைமைகளால் சமுதாயத்தில் ஏற்படும் எதிர்மறை விளைவுகளை ஆதாரபூர்வமாக முன்வைக்கவும் இது உதவுகிறது. ஒரு தமிழக கிராமத்தில் இந்தச் சட்டத்தை செயல்படுத்த முனைந்தபோது ஏற்பட்ட எதிர்வினைகள் பல அம்சங்களை வெளிப்படுத்துவதாக இருந்தன. சந்தைப் பொருளாதாரத்தால் தனது வட்டாரத்திற்குள் ஏற்பட்ட எதிர்மறை தாக்கங்கள் குறித்து வெளிப்படுத்தவோ அல்லது அதற்கான நிவாரணம் கோரவோ ஒரு கிராம ஊராட்சிக்கு உரிமை இருக்கிறதா? வேர் மட்டத்திலான உள்ளாட்சி அமைப்புகள் சந்தை அதிகாரத்துக்கு எப்படி சவால் விடுகின்றன அல்லது அதனுடைய ஆதிக்கத்துக்கு உட்படுகின்றன? குடிமக்களோ உள்ளாட்சி அமைப்புகளோ ஜனநாயக மாண்புகளை மீட்பதற்கு இந்தச் சட்டம் எந்த அளவிற்கு உதவிகரமாக இருக்கிறது? ஆர்.டி.ஐ. சட்டம் வந்த பிறகு வேர் மட்ட ஜனநாயகம் எந்த அளவிற்கு ஜனநாயகமாக இருக்கிறது? லாப நோக்கம் கொண்டவர்களால் ஏற்பட்ட அராஜகங்களைக் கண்டும் காணாமலும் இருந்த அரசு அதிகாரிகளுக்கு ஆர்.டி.ஐ. சட்டத்தின் மூலமாக நிர்ப்பந்தம் அளிக்க ஒரு கிராம ஊராட்சித் தலைவருக்கு வழிகாட்டிய இரண்டு ஆய்வாளர்கள் தயாரித்துள்ள நடைமுறை ஆய்வறிக்கைதான் இந்தக் கட்டுரை.

### முன்னுரை

சமூக நீதிக்கும் சம நீதிக்குமான ஒரு கருவியாக இருப்பது ஜனநாயகம். பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளின் மூலமாக ஜனநாயகம் செயல்படுகிறது. இந்தியாவின் உயர்மட்ட ஜனநாயக அமைப்பு உலகமயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொருளாதார நடவடிக்கைகளின் தாராளமயமாக்கலையும் தனியார்மயமாக்கலையும் நோக்கிச் செல்வது என்று 20 ஆண்டுகளுக்கு முன்னால் முடிவு செய்தது. அப்போதிருந்து அரசாங்கத்தால் இயக்கப்படும் அமைப்புகளும் சந்தையால் இயக்கப்படும் அமைப்புகளும் இணையான கோடுகளில் இயங்கி வருகின்றன (ஜீன் டிரேஸ் மற்றும் பிறர், 2005) நமது ஜனநாயக நடைமுறைகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் குடிமக்களின் தகவல் உரிமைச் சட்டம் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் (என்.ஆர்.இ.ஜி.ஏ) சமூகத் தணிக்கை போன்ற பல சீர்திருத்தங்கள் நிகழ்ந்துள்ளன.

பொருளாதாரத் திறன் குறித்த மதிப்பீடுகள் பல அருமையான பலன்களை அளித்துள்ளன. உதாரணமாக, ரகசிய வாக்குப் பெட்டியில் போடப்பட்ட வாக்குச் சீட்டுகளை நேரடி எண்ணிக்கைக்கு உட்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேரம் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்துள்ளது. "வாக்கு எண்ணிக்கை வேலைக்கு" பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள், தங்களுடைய வழக்கமான வேலைகளை அப்படியே விட்டுவிட்டு வரவழைக்கப்பட வேண்டும் என்பது தேவையில்லாமல் போய்விட்டது. செயல்திறனோடு நேரம் என்கிற அம்சமும் பிணைந்திருப்பது இந்த நடைமுறையில் பளிச்செனத் தெரிகிறது. மற்றொரு நல்ல உதாரணம், மொபைல் ஃபோன் மூலமாக செய்யப்படும் அழைப்புகளுக்கு ஆகிற செலவைக் குறிப்பிடலாம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண தொலைபேசியைப் பயன்படுத்தியபோது ஆன செலவோடு ஒப்பிடும்போது இது பொருளாதார ரீதியான செயல்திறனாக இருக்கிறது.

### பொது வள நிர்வாகம்

கிடைக்கக்கூடிய வள ஆதாரங்கள் அரிதானதாகவே இருக்கிற நிலையில், 'சமூகரீதியாக சமமான முறையில்' அந்த வளங்களை ஒருங்கிணைத்து ஒதுக்கீடு செய்வது என்பது அரசின் கவலையாக இருக்கிறது. இது பொருளாதாரச் செயல்பாடு தொடர்பான ஒரு நடைமுறை சார்ந்த அணுகுமுறை ஆகும். அந்த வளங்களை எப்படி 'லாபகரமான முறையில்' பயன்படுத்துவது என்பதே சந்தையின் தலையாய கவலையாக இருக்கிறது (யூஜிரோ ஹயாமி மற்றும் பிறர், 2006). குறிப்பாக, மேம்பாட்டுக்கான நெறிமுறைகளை லாபநோக்கங்கள் பின்னுக்குத் தள்ளுகிறபோது சமூக நீதி குறித்த உரிமைகள் சார்ந்த கேள்விகளும் விவாதங்களும் எழுகின்றன. அரசு என்பது சட்டப்பூர்வமாக கட்டாயப்படுத்துகிற அதிகாரத்தை ஏகபோகமாக வைத்திருக்கிற ஒரு அமைப்பேயாகும். இந்த கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தால் பொருளாதார ரீதியாகவோ, வேறு அடிப்படையிலோ, சட்டங்கள், விதிகள், ஆணைகளின் மூலமாக, மக்கள் மற்றும் அமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் முறைப்படுத்தவும் முடியும் (ராபர்ட் கில்பின், 2001). சந்தை அமைப்பு தோல்வி

அடைகிற நிலைகளில் அதனால் சமுதாயம் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கத்துடன் அரசாங்கம் தலையிடுகிறது (இக்னேஷியஸ் சித்தலேன், 2008).

அடிப்படையில் சந்தைச் செயல்பாடுகளின் மட்டம் அல்லது அளவு என்பது அரசுக் கொள்கைகளால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், பிரச்சனை என்னவென்றால் அரசும் சந்தையும் பிரிக்க முடியாதபடிக்கு ஒன்றையொன்று சார்ந்துள்ளன (சிக்தார், 2008). எனவே, அரசாங்கத்தை திருப்திகரமாக வைத்திருக்க சந்தை விரும்புவது போல, சந்தையைத் திருப்திகரமாக வைத்திருக்க அரசு விரும்புகிறது. பொருளாதாரத்தின்மீது சந்தைக்கு / தனியார் துறைக்கு இருக்கும் பிடி அதிகரிக்கிறபோது அதற்கு அரசு செவிசாய்க்க வேண்டியிருக்கிறது; பொருளாதாரத்தையும் அரசியலையும் சுமூகமாகக் கொண்டு செல்வதற்காக அரசு இவ்வாறாக செவிசாய்க்க வேண்டியிருக்கிறது என்பது வெளிப்படை. அரசு – சந்தை உறவில் ஒருவகையான பரஸ்பரத் தன்மை அல்லது கொடுக்கல் வாங்கல் ஏற்பாடு இருக்கிறது. அப்பட்டமாகச் சொல்வதென்றால் “உன் முதுகை நான் சொறிந்துவிடுகிறேன், என் முதுகை நீ சொறிந்துவிடு” என்பது போன்ற உறவுதான் இது. அரசுக்கும் சந்தைக்கும் இடையேயான இந்த உறவு மிதமிஞ்சிய களிப்பைத் தருவதாக இருக்கிற அதேநேரத்தில், இதனால் எளிய மக்கள் நசுக்கப்படுகிறார்கள். இதனால் குடிமக்களின் உரிமைகள் நெருக்குதலுக்கு உள்ளாகின்றன. இது சமூக அநீதிக்கு இட்டுச் செல்கிறது.

சந்தைச் சக்திகளோடு அரசாங்கம் கைகோர்க்கிறபோது, கிராம ஊராட்சி உள்ளிட்ட வேர்மட்டத்திலான ஜனநாயக அமைப்புகள், எளிய மக்களோடு சேர்ந்து, தங்களது அடித்தளத்தையும் தரத்தையும் இழக்கின்றன. தாராளமய, தனியார்மயக் கொள்கைகளை நாம் நிறைவேற்றி பின்பற்றத் தொடங்கிய பிறகு உள்ளாட்சி அமைப்புகள் கீழே தள்ளப்படுகிற வேகம் பல மடங்கு அதிகரித்திருக்கிறது (ஜி. பழனிதுரை, மற்றும் பிறர், 2008). இத்தகைய சூழலில், குடிமக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும், சமூக அநீதி இழைக்கப்படுவதையும் அரசு/அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கான குறைந்தபட்ச, அவசியமான நடவடிக்கைகளை குடிமக்களுக்கான அமைப்புகள் மேற்கொள்கின்றன. “குறிப்பிட்ட பிரச்சனைக்கான தகவல் ஆதாரங்கள்” இல்லாத நிலையில், மக்கள் ஓசையின்றி துன்புறுகிறார்கள் அல்லது எவ்வளவு உறக்க முழக்கமிட்டாலும் அது வீணாகப் போகிறது. உரிய தகவல் இல்லாமல் குடிமக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் (30 நாட்களுக்குள்) அந்தத் தகவல் கிடைப்பதற்கு இந்தச் சட்டம் வழி செய்கிறது. சந்தைச் சக்திகள் தமது பெரும் வலிமையைப் பயன்படுத்தி அரசை வாய்மூடச் செய்ததையும், ஆனால், ஒரு உள்ளாட்சி அமைப்பு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசைச் செயல்பட வைத்ததையும் பின்வரும் அனுபவம் காட்டுகிறது.

### கவனத்தில் கொள்ள ஒரு கதை: கீழ வளவு, மதுரை, தமிழ்நாடு

தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில், மதுரை நகரிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் மேலூர் வட்டத்திற்கு உட்பட்ட ஒரு கிராம ஊராட்சிதான் கீழ வளவு. இந்த கிராமத்தில் உள்ள 8 குடியிருப்புகளில் சுமார் 7,800 பேர் வசிக்கிறார்கள். “சட்ட விரோத கிரானைட் கொள்ளை” தொடர்பான பல செய்திகள் பல்வேறு தமிழ் நாளேடுகளில் வந்துள்ளன. சமீபத்திய செய்தி ஒன்று இந்த கிராமத்தின் ஒரு குடியிருப்புப் பகுதியில் வாழ்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில், அவர்கள் குடியிருக்கும் பகுதியின் பெயர் வேண்டுமென்றே மாற்றப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தியது. கீழ வளவு ஊராட்சித் தலைவர் விடுத்த வேண்டுகோளின்படி மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில், இந்தியத் தொல்லியல் துறையின் கண்காணிப்பில் இருக்க வேண்டிய இடங்களில் இருந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் – பிரம்மி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பாறைகள் தகர்க்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அந்த கல்குவாரி பகுதியைச் சுற்றி பொதுப் பணிகள் துறையின் கண்காணிப்பிலும் ஊராட்சி ஒன்றியத்தின் (வட்டார வளர்ச்சி அலுவலகம்) பராமரிப்பிலும் இருக்க வேண்டிய குளங்கள், ஏரிகள் போன்ற பொதுச் சொத்துகள் காணாமல் போய்விட்டதும் தெரியவந்தது. அந்த குளங்களுக்கும் ஏரிகளுக்குமான கால்வாய்கள், வெட்டி எடுக்கப்பட்ட வெள்ளைக் கற்களால் அடைக்கப்பட்டுவிட்டன. இதனால், உள்ளூர் விவசாயிகள் வேறு வழியின்றி தங்களின் நிலங்களை விற்க வேண்டிய நிலை படிப்படியாக உருவானது. அந்த நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாக கல்குவாரி நிறுவனம் கைப்பற்றிக் கொண்டது.

கல்குவாரிக்கு அருகிலிலுள்ள ஒரு குடியிருப்புதான் அடைச்சன்கண்மாய்ப்பட்டி. அந்தக் குடியிருப்பில் உள்ளோருக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு குடும்ப அட்டையில் கூட அந்தக் குடியிருப்பின் பெயர் குறிப்பிடப்படவில்லை. பக்கத்தில் உள்ள வேறு ஏதோ ஒரு குடியிருப்பில் வசிப்பவர்களாகவே அவர்கள் அதில் காட்டப்பட்டிருக்கிறார்கள். குடும்ப அட்டையில் இப்படியொரு போலியான தகவல் அச்சிடப்பட்டிருக்கிறது. கிராம வரைபடத்திலிருந்தே அந்தக் குடியிருப்பின் பெயரை அகற்றுகிற நோக்கத்துடன் வேண்டுமென்றே அவ்வாறு செய்யப்பட்டதாக, குடும்ப அட்டைதாரர்கள் கூறுகிறார்கள், இதன்மூலம், எதிர்காலத்தில் அந்தக் குடியிருப்பில் பல ஆண்டுகளாக யாரும் குடியிருக்கவில்லை என்று காட்டுவதற்கு ஏதுவாக

இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குடியிருப்பில் உள்ள 56 குடும்பங்கள் காலப்போக்கில் வேறு எங்காவது குடியேறியாக வேண்டும் என்பதே இதில் மறைந்துள்ள விஷயம். இதைப்பற்றியெல்லாம் மக்கள்கவலைப்படவில்லை. அதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. அவை வருமாறு: (1) அந்த தனியார் கிரானைட் நிறுவனம் கோவில் திருவிழாக்களின்போது அவர்களுக்கு தாராளமாக நன்கொடை வழங்குவது வழக்கம். இதனால், அந்த நிறுவனத்தின்மீது அவர்களுக்கு இருக்கிற ஒரு உணர்வுப்பூர்வமான ஈடுபாடு. (2) குடும்ப அட்டையில் இடத்தின் பெயர் மாற்றப்பட்டதால் குடிமைப் பொருள்கள் வழங்கல் துறையின் கீழ் உள்ள பொது விநியோகக் கடைகளிலிருந்து பொருள்கள் வாங்குவதற்கு எந்தத் தடையும் ஏற்பட்டுவிடவில்லை. (3) ஒருவேளை அந்த இடத்திலிருந்து வெளியேறி (அதற்கான வாய்ப்பு இருக்கிறது). வேறு இடத்தில் குடியேற நேரிட்டால், தங்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலத்திற்கு கிரானைட் நிறுவனம் உரிய இழப்பீட்டுப் பணத்தைக் கொடுத்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

தடைவிதிக்கப்பட்ட பகுதியில், அதாவது வரலாற்றுச் சின்னங்கள் என்று அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்ற இடங்களைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவுக்குள், பாறைகள் வெட்டப்படுகின்றன என்று (தமிழ், ஆங்கில) ஊடகங்களில் தொடர்ச்சியாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. ஆனால், இந்திய தொல்லியல் துறையும், மாநில தொல்லியல் துறையும் ஏனோ இதைக் கண்டுகொள்ளாமலே இருக்கின்றன. உள்ளாட்சிகளின் கண்காணிப்பில் இருக்க வேண்டியவை இருப்பதாகக் கருதப்படுகிற பொதுச் சொத்துக்களையும் பொது நிலங்களையும் எப்படி பாதுகாப்பது என்று தெரியாத நிலையில் ஊராட்சித் தலைவர் சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தனக்குத் தெரிந்த அரசியல்வாதிகளுக்கும் பதற்றத்துடன் கடிதங்கள் அனுப்பினார். ஆனால், அவர்கள் யாருமே ஊராட்சித் தலைவருக்கு பதில் அனுப்பவில்லை.

### தகவல் உரிமை:

சில ஆய்வாளர்களின் வழிகாட்டல்படி, இந்த அத்துமீறலுக்கு எதிராக போராடுவதற்காக ஒரு ஆயுதமாக தகவல் உரிமைச் சட்டத்தை கையில் எடுத்தார் ஊராட்சித் தலைவர். அவருடைய முந்தைய மனுக்களை பரணில் தூக்கிப்போட்ட அதிகாரிகள் இப்போது செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கனிமச் சுரங்கங்கள், தொல்லியல் துறை, கிராம குளங்கள் மற்றும் ஏரிகள் பராமரிப்புத்துறை, வேளாண் வளர்ச்சித்துறை, கிராம மேம்பாட்டுப் பணிகள் துறை மற்றும் கீழ வளவு கிராமத்தின் பொது கிராம மேம்பாட்டுப் பணிகள் துறை ஆகியவை சார்ந்த பல்வேறு அதிகாரிகளுக்கு ஆர்டிஐ சட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

### கேள்விகளின் நோக்கம்:

கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் பின்வரும் உண்மைகளை தெளிவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது: (அ) நில ஆக்கிரமிப்பு மற்றும் ஆக்கிரமிப்பின் அளவு, (ஆ) குத்தகைக் காலம் முடிவடைந்த பிறகும் பாறைகள் வெட்டப்படுவது தொடர்ந்ததா, (இ) விவசாயம் பாதிக்கப்பட்டதா (ஈ) குளங்கள் மூடப்பட்டதா (உ) நீர்வழிகள் அடைக்கப்பட்டதா. சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து இந்தத் தகவல்கள் கிடைப்பது என்பது, இந்தத் தகவல்களை அதிகாரப்பூர்வமாக எழுத்தில் பெறுவது என்பதாகும்; அதாவது பாதிக்கப்பட்ட கிராம ஊராட்சியின் வாதங்களுக்கு சாதகமாக அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிடமிருந்தும் உறுதிப்படுத்திக் கொள்வது என்பதாகும். உண்மை என்ன என்பது வெளிப்படை. ஊராட்சித் தலைவருக்குத் தேவைபட்டதெல்லாம், வெளிப்படையாகத் தெரிகிற "உண்மைக்கு ஆதாரமான தகவல்கள்தான்".

### கேட்கப்பட்ட கேள்விகள்:

பல்வேறு அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்ட கேள்விகளின் மாதிரிகள் இங்கு தரப்பட்டுள்ளன. சம்மந்தப்பட்ட துறைகள் மற்றும் அதிகாரிகளின் பெயர்கள், அடையாளத்தைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை:

#### புவியியல் மற்றும் சுரங்கங்கள் துறை:

- கீழ வளவு ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பாறைகள் வெட்டுவதற்கும் எடுத்துச் செல்வதற்கும் வழங்கப்பட்ட உரிமத்தின் நகலை வழங்கவும். கீழ வளவு கிராம ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட குடியிருப்புகளின் பெயர்கள் ..........
- எஸ்.எப். எண் 296, கீழ வளவு ஊராட்சிக்குள் வருகிறது. இந்த சர்வே எண் பகுதிக்குள் பாறைகள் வெட்டி எடுப்பதற்கான அதிகாரப்பூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறதா ?
- கீழ வளவு ஊராட்சிப் பகுதியில் சுரங்கம் வெட்டுவதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமப் பகுதி எவ்வளவு ?
- குறிப்பிட்ட குவாரியிலிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டு செல்ல சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பாறைகளின் அளவு எண்ணிக்கை என்ன ? அந்தப் பாறைகள் எங்கு எடுத்துச் செல்லப்படுகின்றன ?
- குவாரி உரிமதாரர் / குத்தகைதாரர் ஊராட்சிக்கு செலுத்திய பாறை எடுப்புக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின் தொகையைத் தெரிவிக்கவும்.

### வருவாய்த் துறையினர்

- கீழ வளவு ஊராட்சியில் எத்தனை ஏக்கர் பொதுப் புறம்போக்கு நிலங்கள் உள்ளது ? (ஒவ்வொரு பொது நில வகைக்கும்) ஏக்கர் / ஹெக்டர் வாரியாக வகைப்படுத்தல் விவரங்களைத் தெரிவிக்கவும்
- எவையெல்லாம் பொது நிலங்கள், அவைகளின் தன்மைகள், எவையெல்லாம் தனியார் பட்டா நிலங்கள் என்று காட்டுகிற வரைபடத்தை அளிக்கவும்.
- வருவாய்த்துறைக்கு வரி, துணை வரி மற்றும் கட்டணங்கள் செலுத்துகிற தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மற்றும் கனிமச் சுரங்க நிறுவனங்களின் பட்டியலும், ஒவ்வொரு ஆண்டு அவை செலுத்துகிற தொகைப் பட்டியலையும் அளிக்கவும்.
- நெறியற்ற நபர்களால் அதிகாரப்பூர்வமற்ற முறையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கான நடைமுறை என்ன ?
- இது தொடர்பாக கிராம ஊராட்சி தொடர்புகொள்ளக் கூடிய அரசு அதிகாரி யார் ? (பதவிப் பொறுப்பையும் முகவரியையும் தெரிவிக்கவும்)

### பொதுப்பணிகள் துறை:

- கீழவளவு ஊராட்சியில் பொதுப் பணித்துறையால் பராமரிக்கப்படுகிற பாசன ஏரிகள், குளங்கள் ஊரணிகள் மற்றும் இதர நீர் நிலைகள் குறித்த பட்டியலை பின்வரும் அட்டவணையில் வழங்குக:
- இந்த ஏரிகள், குளங்கள் முதலிய ஒவ்வொரு நீர்நிலையின் (நீர் வழங்கல்) நீளம் எவ்வளவு ?

### வட்டார வளர்ச்சி அலுவலர்

கீழவளவு ஊராட்சியில் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற பாசன ஏரிகள், குளங்கள் ஊரணிகள் மற்றும் இதர நீர் நிலைகள் குறித்த பட்டியலை பின்வரும் அட்டவணையில் வழங்குக:

- இந்த ஏரிகள், குளங்கள் முதலிய ஒவ்வொரு நீர்நிலையின் (நீர் வழங்கல்) நீளம் எவ்வளவு ?

### வேளாண்மை

- கீழவளவு ஊராட்சிப் பகுதியில் 'சாகுபடி நிலங்கள்' எத்தனை ஏக்கர் உள்ளன ? 1995, 2000, 2005, 2010 ஆகிய ஆண்டுகளுக்கான விவரங்களைத் தருக
- கீழவளவு ஊராட்சியில் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் என்ன ?
- கீழவளவு ஊராட்சியில் பல்வேறு பயிர்களின் விளைச்சல் அளவுபற்றிய விவரங்களைத் தெரிவிக்கவும். 1995, 2000, 2005, 2010 ஆகிய ஆண்டுகளுக்கான விவரங்களைப் பெறுக
- தங்களது அதிகாரப்பூர்வ ஆவணங்களின்படி கீழவளவு ஊராட்சியில் உள்ள விவசாயிகளுக்கான ஏரிகள், குளங்கள், ஊரணிகள் முதலியவற்றின் பிரதானமான "மேல் பரப்பு நீர்பாசன ஆதாரங்கள்" என்ன ?
- கீழவளவு ஊராட்சிக்கு உள்ளேயே ஓடக்கூடிய நீர் நிலைகளின் நீளம் (மீட்டர் அல்லது அடிக்கணக்கில்) எவ்வளவு ?

| வ.எண். | நீர்நிலையின் பெயர் | வகை | பரப்பு (நீர் பரப்பு) | அதிகாரப்பூர்வ எல்லை வரையறுக்கப்பட்டிருக்கிறதா ? |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| n | | | | |

- தங்களது அதிகாரப்பூர்வ ஆவணங்களின்படி கீழவளவு ஊராட்சியில் உள்ள குடும்பங்களில் எத்தனை பேர் (அ) பெரிய விவசாயிகள், (ஆ) சிறிய விவசாயிகள், (இ) குறு விவசாயிகள் மற்றும் (ஈ)

| வ.எண். | நீர்நிலையின் பெயர் | வகை | பரப்பு (நீர் பரப்பு) | அதிகாரப்பூர்வ எல்லை வரையறுக்கப்பட்டிருக்கிறதா ? |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| n | | | | |

பெறுவதற்காக அந்தத் துறைகளை பல்வேறு விதமான கேள்விகள் மூலம் இரண்டு, மூன்று முறை அணுக வேண்டியிருந்தது. கிராம ஊராட்சித் தலைவரின் நோக்கம் பின்வரும் தகவல்களை கண்டறிவதும் நிலைநாட்டுவதும்தான்: (i) அனுமதிக்கப்பட்ட பகுதியையும் தாண்டி, பல ஆண்டுகளாக முறையற்ற பாறை எடுப்பு நடந்து வந்திருப்பது; (ii) பாறை வெட்டப்பட்டதன் காரணமாக பாசன நீர் அமைப்புகளும், நீர் வழிகளும் அடைபட்டிருப்பது; (iii) விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு விவசாய உற்பத்தியில் பெரும் சரிவு ஏற்பட்டிருப்பது; (iv) பாறைகள் எடுக்கப்பட்டதன் மூலம் ஊராட்சிக்கு உள்ளூர் மேம்பாட்டு பணிகளுக்குப் பயன்படுத்தியிருக்கக் கூடிய, வருவாய் எதுவும் வரவில்லை என்பது.

## கிடைத்த பதில்கள்:

தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் பதில்கள் வந்தன. ஆயினும், வந்த பதில்களின் தன்மைகளும், போதுமான தகவல்கள் வந்தனவா என்பதும் மாறுபட்டு இருந்தன. தகவல் உரிமைச் சட்ட மனுக்களை அதிகாரிகள் பல வழிகளில் கையாளுகின்றனர். இதற்கு முன் மூன்று, நான்கு ஆண்டுகளாக ஊராட்சித் தலைவர் அல்லது ஊராட்சி சம்மந்தப்பட்டவர்கள் அனுப்பிய கடிதங்களுக்கு எவ்வித பதிலும் வந்ததில்லை. இப்போது, இந்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் மனு அனுப்பிய 30 நாட்களுக்குள் சில பதில்கள் அவர்களுக்குக் கிடைத்தன என்பது மனுதாரருக்கு ஒரு ஆறுதலான விஷயம்தான். வருகிற தகவல்கள் பொருத்தமானதாக, போதுமானதாக, பயனுள்ளதாக இருக்கின்றனவா இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, தகவல் உரிமை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்கான பதில்கள் மக்களுக்கு / உள்ளாட்சி மட்டத்திலான அமைப்புகளுக்கு வருகின்றன என்று சொல்ல முடியும். சில பொதுத் தகவல் அதிகாரிகள் தகவல் உரிமை சட்ட மனுக்களின் மேலே, ‘‘மிகவும் அவசரம்’’ என்று எழுதுகிறார்கள். சம்மந்தப்பட்ட பணியாளர்கள் 30 நாட்களுக்குள் பதில் அனுப்புமாறு அந்த அதிகாரிகள் ஆணையிடுகிறார்கள். ‘‘விண்ணப்பதாரரால் கோரப்பட்டுள்ள தகவல் நம்முடைய துறைக்கு உட்பட்டதாக இல்லை என்றாலும் கூட, அதனை ஆர்டிஐ சட்டத்தின் பிரிவு 6(3)ன் கீழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்று உரிய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டும்,’’ என்று குறிப்பிட்டு இணைப்புக் கடிதம் அனுப்புகிற சில அதிகாரிகளும் உண்டு (உதாரணமாக மேலூர், வேளாண் உதவி இயக்குநர்). ஆகவே, ஒரு சட்டம் என்ற முறையில் குடிமக்களின் தலையை இந்தச் சட்டம் நிமிரச் செய்திருக்கிறது. அதிகாரிகளை பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக ஆக்கியிருக்கிறது.

### உரிய நேரத்தில் முறையான பதில்:

ஊராட்சியால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உரிய காலத்திற்குள் தகவல் அனுப்பிய அதிகாரிகள் உண்டு. வேளாண்துறை உதவி இயக்குநர் அனுப்பிய ஆவணங்களின்படி கீழவளவு கிராமத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்கள் வருமாறு: நெல், கரும்பு, வாழை. கீழவளவு ஊராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் வீழ்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பதை நிரூபிக்க இந்த விவரங்கள் உதவ முடியும். 1995ம் ஆண்டில் 2,929 டன் நெல் விளைச்சல் கண்ட இந்த கிராமத்தில் 2005ம் ஆண்டில் 1,542 டன் நெல்தான் உற்பத்தியானது. 2008ல் அது 802 டன் ஆக சரிவடைந்தது. 3,384 டன் ஆக இருந்த கரும்பு விளைச்சல் 2008ம் ஆண்டில் 1,817 டன் ஆகக் குறைந்துவிட்டது. 166 டன் அளவிற்கு இருந்த வாழை உற்பத்தி 2008ம் ஆண்டில் 58 டன் ஆக சரிந்துவிட்டது. பொதுப் பணித் துறையிலிருந்து வந்த தகவலின்படி கிராமத்தின் பல்வேறு குளங்கள் மற்றும் ஏரிகளின் எல்லைப் பகுதிகளைக் காணவேயில்லை. அந்த எல்லைகளுக்கான அடையாளக் கற்கள் ஊன்றப்படவில்லை என்று பொதுப்பணித்துறை எங்களது மனுவிற்கு அனுப்பிய தனது பதில் கடிதத்தில் தெரிவித்திருந்தது. மழைக் காலங்களில் இந்தக் குளங்களுக்கும் ஏரிகளுக்கும் தண்ணீரை கொண்டுவந்து சேர்க்கிற கால்வாய்களின் கதியும் இதேதான். இந்தத் தகவல்கள் நில ஆக்கிரமிப்பு நடந்திருப்பதையும், அதனால் விவசாயம் வீழ்ச்சி அடைந்துவிட்டதையும் கிராம ஊராட்சித் தலைவர் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க உதவியாக இருந்தது.

### சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் அதிகாரிகள்:

சில அதிகாரிகள் இதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு மனுக்களை விளையாட்டாக கையாள்கிறார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் விஷயத்தில் பெரும்பாலும் இப்படித்தான் நடந்தது. உள்ளாட்சி சம்மந்தப்பட்டவர்களோடு தொடர்ச்சியாக பழகுகிறவர் அவர். மனுதாரரின் முகம் அவருக்கு மிகவும் பரிச்சயமானது. கீழவளவு கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள நீர்நிலைகள் பற்றிய தகவல்களைக் கேட்டு ஊராட்சித் தலைவர் ஆர்டிஐ சட்டத்தின் கீழ் அனுப்பிய மனுவுக்கு 30 நாட்கள் கழித்து வட்டார வளர்ச்சி அலுவலர் அனுப்பிய பதில் இதுதான்: ‘‘இந்தத் தகவல் ஊராட்சி அலுவலரிடம்தான் இருக்கும்.’’ ஆர்டிஐ மனு தாக்கல் செய்யப்பட்டபின் கிட்டதட்ட 30வது நாளில் கிடைத்த பதில் இதுதான். தகவல் கோரும் மனு ஊராட்சி அலுவலகத்திலிருந்து சென்றிருக்கிறது. ’ஊராட்சிகளுக்கான வட்டார வளர்ச்சி அலுவலர்’ என்பவர் ஒரு அரசு அதிகாரி. குறிப்பிட்ட சில ஊராட்சிகள் அவரது பொறுப்பில் உள்ளன. ஊராட்சி தொடர்பான விவகாரங்களை கையாள்கிறவர் அவர்தான். ஊராட்சியின் நீர்நிலைகள் தொடர்பான சில தகவல்களை

இருட்டிலிருந்து வெளியே கொண்டுவருவதற்காக ஒரு ஊராட்சி தகவல் கேட்கிறது. அதற்கு அளிக்கப்படுகிற பதில் "இந்தத் தகவல் ஊராட்சி அலுவலரிடம்தான் இருக்கும்." முதல் முறையாக தலைவராகப் பொறுப்பேற்றிருந்த ஊராட்சித் தலைவர் முதலில் தடுமாறிவிட்டார். பின்னர் இதே தகவலைக் கேட்டு கிராம நிர்வாக அலுவலருக்கு (VAO) ஆர்டிஐ மனு அனுப்பினார். அவரிடமிருந்து பதில் வந்தது. அதில் 16 நீர்நிலைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு நீர்நிலை கூட பராமரிக்கப்படவில்லை. அனைத்து நீர்நிலைகளும் கல் குவாரி நிறுவனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

### மீண்டும் மீண்டும் முயன்றாக வேண்டும்:

சில அதிகாரிகள் (அவர்கள் யார் என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை) குறிப்பான வார்த்தைகளுடன் ஒவ்வொரு கேள்வியையும் அனுப்பிய பிறகே, இனிமேலும் நழுவ முடியாது அல்து இழுத்தடிக்க முடியாது என்ற நிலையிலேயே பதில் அளித்தார்கள். பொதுப் பணித்துறைக்கு அனுப்பிய முதல் மனுவிற்கு வந்த பதில், மனுதாரர் கேட்ட தகவலை தெரிவிக்க வேண்டிய அலுவலகம் அது அல்ல என்பதுதான். பின்னர், "பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகளின் பட்டியல், அவற்றின் நீர்பரப்புப் பகுதி, மற்றும் அவற்றின் எல்லையைச் சுட்டிக்காட்டும் கற்கள் ஊன்றப்பட்டுள்ளனவா என்ற முறையான கேள்விகள் அனுப்பப்பட்ட பிறகு பதில் வந்தது. அந்த பதிலில் இருந்த தகவலின்படி (i) ஏரிகளின் மிகப் பெரும்பாலான நீர்பரப்புப் பகுதிகள் குவாரி நிறுவனத்தின் ஆக்கிரமிப்பில் இருந்தன. (ii) ஏரியைச் சுற்றி எங்கேயுமே பொதுப்பணித்துறை எல்லைக் கல் ஊன்றவில்லை. (iii) இந்த ஏரிகளுக்கு ஊற்றுநீர் அல்லது ஓடுநீர் கொண்டு வரும் நீர்நிலைகளின் நீளம் 3,060 மீட்டர், அதன் பெரும் பகுதி கிரானைட் நிறுவனத்தால் தனது சொந்தப் பயன்பாட்டிற்கு என ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

இவையல்லாமல் பின்வருபவை உள்ளிட்ட வேறு பல பயனுள்ள தகவல்களையும் ஊராட்சியால் பெற முடிந்தது: (i) குத்தகைக் காலம் முடிவடைந்த பிறகும் கூட பாறைகள் வெட்டி எடுக்கப்படுவது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது; (ii) குத்தகை உரிம ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி ஒன்று, உண்மையிலேயே பாறைகள் வெட்டி எடுக்கப்பட்ட வேறொன்று. (அது அருகிலேயே இருந்தது); (iii) குத்தகைக் காலம் 1993ல் முடிவடைந்துவிட்டது, ஆனால், பாறைகள் வெட்டி எடுக்கப்படுவது தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. கல் எடுப்பதற்கான அனுமதி (அந்த வட்டாரத்தை ஒரு குவாரிக்கு மேல் பல துண்டுகளாகப் பிறித்து) பல்வேறு பிரிவுகளாக அளிக்கப்பட்டிருந்தது. எந்த பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது, எந்தப் பிரிவுகளுக்கு அனுமதி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் தெரிந்துகொள்ள முடியாத வகையில் நிறுவனம் கல் எடுப்பதில் ஈடுபட இந்த உக்தி உதவியது.

### கட்டணக் குாப்பம்:

உரிய தகவல்களை அளிக்காமல் இருப்பதற்கு சில அதிகாரிகள் புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். உதாரணமாக ஒரு மனு அதை அனுப்பியவரிடமே திரும்பி வரும். அதன் மேல் பகுதியில் பின்வருமாறு முத்திரை குத்தப்பட்டிருக்கும் அல்லது ஒரு கடிதம் இணைக்கப்பட்டிருக்கும்: "நீங்கள் கேட்கும் தகவலுக்கான கட்டணத்தை அஞ்சல் பண ஆணையாக (போஸ்டல் ஆர்டர்) ஏற்பதில்லை. வரைவோலையாக அனுப்பவும்," என்று அதில் இருக்கும். வரைவோலையை யார் பெயரில் எடுக்க வேண்டும், எந்த வங்கியில் செலுத்தத்தக்கதாக இருக்க வேண்டும் என்ற விவரம் எல்லாம் அதில் இருக்காது. ஆர்டிஐ மனுக்களுடன் ரூ.10 மதிப்புள்ள அஞ்சல் அல்லது நீதிமன்ற கட்டண முத்திரை இணைக்கப்பட வேண்டும் என்று ஆர்டிஐ சட்டம் கூறுகிறது. ஆனால், தமிழக அரசு பிறப்பித்துள்ள ஒரு அரசாணையில் மனுக்களுடன் ரூ.10 மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண முத்திரை அல்லது வரைவோலை இணைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அஞ்சல் ஆணைக் குறித்து அரசாணையில் எதுவும் சொல்லப்படவில்லை. பொது தகவல் அலுவலர்கள் இதை ஒரு சாக்காகப் பயன்படுத்திக்கொண்டு, கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் மனுக்களைத் திருப்பி அனுப்புகிறார்கள். ஆர்டிஐ சட்டத்தின் கீழ் கட்டணத்தை நேரடியாகச் செலுத்துவதற்கு என ஸ்டேட் பேங்க் கணக்கு ஒன்றும் இருக்கிறது. வங்கியில் பணம் செலுத்தப்பட்டதற்கான அடிக்கட்டையை (கவுன்ட்டர்ஃபாயில்) இணைத்தால்போதும். "தமிழ்நாடு தகவல் உரிமைச் சட்டம் (கட்டணம்) விதி 2005 (அரசாணை எண் 989, பொது (Estt.I & leg. Dept. dated 7.10.2005) இந்திய ஸ்டேட் பேங்க் கணக்கு DPC 0075 00 800 BK 0006," என்று தமிழகச் சட்டம் கூறுகிறது. ஆனால், இந்த கணக்கு எண்ணை மேலூரில் உள்ள ஸ்டேட் பேங்க் கிளை அங்கீகரிக்கவில்லை. ஆகவே, ஊராட்சியிலிருந்து நீதிமன்றக் கட்டண முத்திரையை மட்டுமே அனுப்ப வேண்டியதாகிறது. வரைபடங்களின் நகல்களைப் பெறுவதற்கும் கட்டணங்கள் இதே முறையில் செலுத்தப்பட்டாக வேண்டும்.

### திட்டமிட்ட தலையீடு தேவை:

அதிகார வர்க்கத்தின் கடுமை, அக்கறையின்மை, மேம்பாட்டு நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையின்மை ஆகியவற்றை எதிர்த்து குடிமைச் சமூகம் போராடுவதில் தகவல்கள் ஒரு முக்கியமான ஆயுதமாகப் பயன்படும். தகவல் உரிமைச் சட்டம் தொடர்பான இரண்டு முக்கிய

விஷயங்கள் வருமாறு: (i) தகவல் கேட்கிற ஒருவர், தனக்கு அந்தத் தகவல் எதற்காகத் தேவைப்படுகிறது என்பது அவசியமில்லை; (ii) சம்மந்தப்பட்ட அதிகாரி 30 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்பதானது மனு பெறப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்படுகிறது. எதற்காகத் தகவல் தேவை என்பதையோ அந்தத் தகவலை எப்படி பயன்படுத்தப் போகிறார் மனுதாரர் தெரிவிக்க வேண்டியதில்லை என்பது அதிகாரியை ஊசலாட வைக்கிறது.

ஆர்டிஐ மனுவின் மூலமாக சரியான துறைக்கு, சரியான வார்த்தைகளுடன் சரியான கேள்வி, பல மாற்றங்களை நிகழ்த்த முடியும். நுட்பமாகச் சொல்வதென்றால், நிலைமைகளை சரிப்படுத்துவதற்காக கிடைத்தத் தகவலை பயன்படுத்தியாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள் என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தாலே, பல விஷயங்கள் முறையாக நடக்கத் தொடங்கிவிடும். தவறு செய்யும் அதிகாரிகளும் தனிப்பட்ட ஆதாயம் தேடும் சக்திகளும் இனிமேல் கவனத்துடன் செயல்பட்டாக வேண்டும், மக்கள் நலனையோ ஏழைகளின் நலனையோ பாதிக்கும் வகையில் எல்லை மீறி நடந்துகொள்ளக் கூடாது என்ற செய்தியை இது கொண்டு செல்கிறது. அரசையும் சந்தை அமைப்பையும் சரியாக நிர்வகிப்பதற்கு உள்ளாட்சி அரசாங்கம் உள்ளிட்ட விழிப்புணர்வுள்ள சமுதாயம் தேவை. குறிப்பாக, அதிகபட்ச லாபம் ஈட்டுவதே நோக்கமாக உள்ள சந்தைப் பொருளாதாரத்தில் மேம்பாட்டு நெறிமுறைகள் பின்னுக்குத் தள்ளப்படுகிற காலகட்டத்தில், இதற்கெல்லாம் சேவைத் தொகை எதிர்பார்க்கிற அரசு அதிகாரிகள் உடந்தையாக இருக்கிற நிலையில் சமுதாயத்திற்கு இப்படிப்பட்ட விழிப்புணர்வு தேவைப்படுகிறது.

சந்தை அமைப்புகளும் உள்ளாட்சி அமைப்புகளும் எப்போதுமே மோதிக்கொள்கின்றன. ஏனென்றால், சந்தை அமைப்புகள் ''பொருளாதார செயல்திறன்'' என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன, உள்ளாட்சிகளோ ''சமூக நீதி'' என்பதற்காக நிற்கின்றன. அரசு செயல்படத் தவறுகிறபோது, ஊடகம் உள்ளிட்ட ஒரு செயலூக்கமுள்ள குடிமைச் சமூகம் அரசைச் செயல்பட வைப்பதற்கான விசையை இழுக்க வேண்டியிருக்கிறது. பொருளாதார செயல்திறன் கணக்குகள் சிறப்பான பலன்களை அளித்துள்ள சம்பவங்கள் பல உண்டு. அதேநேரத்தில் அதே பொருளாதார கணக்குகள் ஏழைகளை அவர்களது வீடுகளிலிருந்தும் வயல்களிலிருந்தும் வெளியேற்றிய சம்பவங்களும் உண்டு (ஸ்டீபன் குல்லன்பர்க், மற்றும் பிறர் 2004).

பெரும்பாலும் சந்தை அதிகாரத்தின் கரங்களும், அதன் விரிவாக்க வழிமுறைகளும் மிகவும் வலிமையானவையாக, ஜனநாயக மாண்புகளையும் கோட்பாடுகளையும் பின்னுக்குத் தள்ளக்கூடியவையாக இருப்பதைப் பார்க்கிறோம். சேவைத் தொகை (லஞ்சம்) எதிர்பார்க்கிற அதிகாரிகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் பயன்படுத்திக் கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை நுட்பமாக கட்டுப்படுக்கக் கூடிய அளவிற்கு சந்தை சக்திகள் செல்வதையும் பார்க்கிறோம். அதே நேரத்தில் உள்ளாட்சி அமைப்புகள் உறுதியுடன் சந்தை சக்திகளை எதிர்த்து நிற்பதையும் காண்கிறோம். பல நேரங்களில் அரசாங்கம் சந்தை சக்திகளின் பக்கமே நிற்கிறது என்ற போதிலும் கூட உள்ளாட்சிகளால் இதை சாதிக்க முடிந்திருக்கிறது (ஜி.பழனிதுரை, மற்றும் பிறர், 2008) சாதாரண குடிமக்களைப் பொறுத்தவரையில் தங்களது அன்றாட வாழ்க்கையில் இரண்டு அமைப்புகளையுமே எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஜனநாயக அமைப்புகள் சந்தையோடு தொடர்பு கொள்வதையும், ஜனநாயகத்தை சந்தை எவ்வாறு கையாள்கிறது என்பதையும், ஜனநாயகத்தின் ஒரு முக்கியத் தூணாகிய ஊடகம் இதை எவ்வாறு விளக்குகிறது என்பதையும் அவர்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அரசு அமைப்பின் ஒரு பிரிவாகிய அரசாங்கத்திற்கு ஒரு அரசியல் கட்சியாக இருக்கிறபோது சாமான்ய மக்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால், ஆட்சி அதிகாரத்தை, சட்டம் ஏற்றும் அதிகாரத்தை வைத்திருக்கிறபோது அதற்கு சாமான்ய மக்கள் தேவையில்லை. எனினும், தேர்தல் அரசியலின் காரணமாக சாமான்ய மக்களை அரசாங்கத்தால் ஒருபோதும் புறக்கணித்துவிட முடியாது. அதே நேரத்தில் அரசாங்கம் தனியார் வர்த்தகத்துறையினரையும் சந்தையையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. சந்தைக்கு சாதகமாக நடந்துகொள்ள அரசாங்கத்தின் முன் நிற்கிற ஒரு நல்ல வழி கட்டுப்பாடுகளை தளர்த்துவதுதான். உண்மையிலேயே கட்டுப்பாடுகள் தேவைப்படுகிற நேரத்தில் அரசாங்கம் அதைத் தளர்த்துகிறது. சந்தையால் சமுதாயத்திற்கு ஏற்படுகிற எதிர்மறை விளைவுகள் பற்றி கவலைப்படாமல் அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்கிறது (தாமஸ் டை ஆர், 2004); மக்களுக்குத் தேவைப்படுகிற தகவல்களை திட்டமிட்டு திரித்துச் சொல்கிறது அல்லது மூடி மறைக்கிறது. அரசியல் மேலாண்மையில் முக்கிய அம்சமாக ஆகியிருக்கிற தனியார் துறையினரின் பாராட்டைப் பெற வேண்டிய அவசியம் இருப்பதால் அரசாங்கம் இவ்வாறு செய்கிறது போலும். ஊடகங்களிடம் அரசாங்கம் தனக்கு கண் தெரியாதது போல், காது கேட்காதது போல் நடந்து கொள்ளலாம். ஆனால், ஒரு உள்ளாட்சி அமைப்பு சரியான தகவல்களுடன் கிடுக்கிப்பிடி போடுகிற போது அரசாங்கத்தால் அப்படி நழுவ முடியாது.

## முடிவுரை: சுருங்குகிறதா அரசு ?

இன்றைய நாட்களில் அரசு பற்றி திரும்பத் திரும்ப

சொல்லப்படுகிற ஒரு கருத்து, அரசு சுருங்கி வருகிறது, சந்தை விரிந்து வருகிறது. அரசு ஒருபோதும் சுருங்காது என்பதையும், நிலைமைகளைப் பொறுத்து அதனுடைய தன்மையில் சில மாற்றங்கள்தான் நிகழும் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும் (எஸ் . பாணர்ஜி, 2009). கண் முன்னால் தெரிகிற அரசு நிர்வாகப் பரப்பை ஒப்பிட்டுப் பார்த்தால் வேறு மாதிரியாகத் தெரியலாம். ஆனால், அதன் தொடர்ச்சியான இருத்தலும் கட்டுப்படுத்தும் தகுதியும் ஒரு போதும் காலாவதியாவதில்லை. அரசு அகன்றுவிட முடியாது, ஏனென்றால், அதுதான் அதிகாரத்தின் கருவூலமாக இருக்கிறது. அரசு சுருங்குகிறது என்று ஒருவர் சொல்கிறார் என்றால், அது அதன் அளவு சிறிதாகிக் கொண்டுவருவதாக அவர் சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அப்படி நடக்கவில்லை. அரசின் வலிமை சுருங்குவதில்லை.

கட்டுப்படுத்தும் அதிகாரமோ கட்டளையிடும் அதிகாரமோ சுருங்குவதில்லை. அரசால் எந்த நேரத்திலும் எழுந்து நிற்க முடியும். தனியார் துறையின் கழுத்தைப் பிடிக்க முடியும் – ஆனால், நிலைமையைப் பொறுத்து இந்தத் தன்மை மாறுகிறது. அது எவ்வாறு வெளிப்படுகிறது என்பது வேறுபடலாம். ஆனால், தூங்குகிற நாய் தூங்கிக்கொண்டே இருக்கட்டும் என்று குடிமக்கள் கருதுவார்களானால் அது தூங்கிக்கொண்டுதான் இருக்கும்.

ஜனநாயகம் என்பது குடிமக்களால் உருவாக்கப்படுவது தான். தனியார் துறையோ ஜனநாயக நடைமுறைகளை சீர்குலைக்கவே துடிக்கிறது என்று செயல்பாட்டாளர்களும், அரசுசாரா அமைப்புகளும் உள்ளாட்சி பிரதிநிதிகளும் பரவலாக குற்றம்சாட்டுகிறார்கள். உள்ளூர் வளங்கள் மோசமாகக் கையாளப்படுவதை அம்பலப்படுத்துவதற்கான ஆதாரமாக தகவல்களைப் பெறுவதற்கு உள்ளாட்சி அமைப்புகள் எந்த அளவிற்குப் போராட வேண்டியுள்ளது என்பதற்கு இந்த ஆய்வறிக்கையில் உள்ள விவரங்கள் சாட்சியமாக உள்ளன.

ஆகவே, நாம் ஜனநாயகத்தைத்தான் உருவாக்குகிறோம் என்பது உண்மைதான் என்றபோதிலும், பெரும்பாலும் ஜனநாயக லட்சியங்களை அரசின் ஜனநாயக அமைப்புகள்தான் நிர்வகிக்கின்றன. ஒரு பொருளாதார அமைப்பின் முக்கியத் தூண்களாக சந்தை சக்திகள் இருக்கும்போது, அவற்றின் வல்லமைக்கு, சிறு அளவிலோ அல்லது பெரும் அளவிலோ செயல்படுகிற ஜனநாயக அமைப்புகள் பணிகிறபோது மற்ற அனைத்தையும் சந்தையால் ஓரங்கட்டவோ அடக்கி ஆளவோ முடிகிறது. ஆனால், ஒரு சரியான வழியால் சமூக நீதிக்காக நிற்பதற்கு அதிகாரமற்றவர்களுக்கு ஒரு வலுவான குரலை அளிக்கிற ஒரு அமைதியான தகவல் ஆயுதமாக தகவல் உரிமைச் சட்டம் வந்திருக்கிறது.

– முனைவர் **ஜி. பழனிதுரை**
காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தில்,
ராஜீவ் காந்தி கிராமிய ஆய்வு நிறுவனத்தின்
உள்ளாட்சி ஆய்வுகள் பிரிவு, பேராசிரியராக
உள்ளார்.

– முனைவர் **ஆர். ரமேஷ்**
எத்தியோபியா நாட்டின் பாஹிர்தார் பல்கலைக் கழக
ஊரக மேம்பாட்டுத்துறை உதவிப் பேராசிரியராக
இருக்கிறார்.

## REFERENCES

Banerjee, S. 2009 "Systemic Intervention Required", Global and Local, No.8, Gandhigram: Rajiv Gandhi Chair for Panchayat Raj Studies, GRI

Ignatius, Chithelen 2008 "Global Financial Crisis: A Long Way from Recovery", Economic and Political Weekly, September, 2008-

Jean, Dreze and Sen, Amartya 2005 "India: Development and Participation", New Delhi: Oxford University Press

Palanithurai, G. and Ramesh, R. 2008 "Globalization: Issues at the Grassroots", New Delhi: Concept Publishing Company

Robert, Gilpin 2001 "Global Political Economy", Hyderabad: Orient Longman

Sikdar 2008 "Comtemporary Isssues in Globalization", New Delhi: Oxford University Press

Culture and the Limits of the Market: Essays in Economics and Philosophy", New Delhi: Oxford University Press

Thomas Dye R. 2004 "Understanding Public Policy", New Delhi: Person Education Inc.

Yujiro Hayami and Yoshihisa Goda 2006 "Development Economics: From Poverty to the Wealth of Nations", New Delhi: Oxford University Press

***Source: Social Action Vol, 62***
***July – September 2012***

# தலித் பெண்களின் நில உரிமைகள் – மாநில மாநாடு
## தீர்மானங்கள்

**நாள்: 12.12.2012** **இடம்: தமிழ்நாடு வர்த்தக சங்கம், மதுரை** **ஏற்பாடு: எவிடன்ஸ்**

1. தலித் பெண்களுக்கான வேளாண் நிலங்கள் என்கிற சிறப்பு திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தலித் பெண்ணிற்கும் தலா 5 ஏக்கர் நிலம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிலங்களில் பயிரிடுதல், மகசூல், பராமரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் தமிழ்நாடு வேளாண்மைதுறை ஈடுபடுத்தப்பட வேண்டும். இதற்கென்று தனி நிதி ஒதுக்கீடும் உறுதிபடுத்தப்பட வேணடும். இந்நிலங்களை விற்பனை செய்வதற்கு தடை விதிப்பது மட்டுமல்லாமல் இந்நிலங்களின் வாரிசுதாரர்களாக தலித் பெண்களை நியமிப்பதற்கும் அரசு சிறப்பு உத்தரவினை வெளியிட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் ஒன்று வலியுறுத்துகிறது.

2. தமிழகத்தில் எங்கெல்லாம் பஞ்சமி நிலங்கள் உள்ளன ? அந்த நிலங்கள் யாரிடம் இருந்தன ? அவை எந்த காலகட்டத்தில் மோசடி செய்யப்பட்டு நிலம் பறிக்கப்பட்டது ? என்பது குறித்து தமிழக அரசு விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். அவ்வாய்வின் முடிவுகளை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் இரண்டு வலியுறுத்துகிறது.

3. பஞ்சமி நிலம், தலித் மக்களுக்கு அரசு கொடுத்த நிலம், தலித் மக்களின் சொந்த நிலங்கள் போன்றவற்றை பறித்த நிலைகள் குறித்து தமிழக அரசு மாநிலம் முழுவதும் குறைதீர்ப்பு கமிட்டி (Grievance Committee) மூலமாக உண்மைகளை கண்டறிந்து அதனடிப்படையில் தீவிர விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த நீதி வழங்குவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் மூன்று வலியுறுத்துகிறது.

4. எதிர்வரும் காலங்களில் தலித் மக்களுக்கு கொடுக்கப்படக்கூடிய நிலங்கள் அனைத்தும் முறையாக அளந்து அவற்றை பதிவு செய்து கொடுப்பதற்கான, நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும். தலித் மக்களின் நிலங்களை அபகரித்தாலோ, விலைக்கு வாங்கினாலோ, அடமானம் பெற்றாலோ சம்பந்தப்பட்ட நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிலத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதற்கும் தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் நான்கு வலியுறுத்துகிறது.

5. தலித் மக்களுக்கு கொடுக்கப்படக்கூடிய விளை நிலங்கள் அனைத்தும் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். விளை நிலங்களோடு வேளாண்மைத்துறையையும் இணைத்து அம்மக்கள் விவசாயம் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட தமிழக அரசு சிறப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் ஐந்து வலியுறுத்துகிறது.

6. தலித் மக்களின் நிலங்களை பறிக்கக்கூடிய வன்கொடுமை கும்பல் மீது தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பியிரவு 3(1)(4) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட தமிழக அரசு அனைத்து காவல்நிலையத்திற்கும் சிறப்பு உத்தரவினை வெளியிட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் ஆறு வலியுறுத்துகிறது.

7. பல்வேறு துறைகளில் தலித்துகளுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று இம்மாநாட்டில் தீர்மானம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவைகளில் 50 சதவீதம் தலித் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் இக்கலந்தாய்வு கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று இம்மாநாட்டின் தீர்மானம் ஏழு வலியுறுத்துகிறது.

8. அரசு செயலர், மாவட்ட ஆட்சித்தலைவர், திட்டக்குழு உறுப்பினர், அரசின் பல்வேறு நல ஆணையங்கள் என்று அனைத்து குழுவிலும் தலித் பெண்களுக்கு 20 சதவீத பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் எட்டு வலியுறுத்துகிறது.

9. தலித் பெண்களின் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் உள்ளிட்ட நடவடிக்கைகளில் அரசு சிறப்பு கவனம் எடுக்கப்பட வேண்டும். இதற்கென்று தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் ஒன்பது வலியுறுத்துகிறது.

10. பஞ்சாயத்து அதிகாரங்களை நிர்வகிக்கக்கூடிய தலித் பெண்களுக்கு சுதந்திரமாக செயல்பட போதுமான பயிற்சிகளையும் வாய்ப்புகளையும் உறுதிபடுத்த வேண்டும். தலித் பெண் பஞ்சாயத்து தலைவர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடிய சாதி இந்துக்கள் மீதும். அரசு எந்திரங்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பத்து வலியுறுத்துகிறது.

11. தனியார் துறை வேலை வாய்ப்புகளில் 30 சதவீத இட ஒதுக்கீடு தலித் பெண்களுக்கு உறுதிப்படுத்துவதை கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பதினொன்று வலியுறுத்துகிறது.

12. தலித் பெண்கள் மீது நடக்கக்கூடிய வன்கொடுமைகள் மற்றும் சித்திரவதைகள் சம்பந்தமாக தனிசிறப்பு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். குற்றவாளிகள் மீது கடும் தண்டனை, நீண்ட, நீடித்த மறுவாழ்வு திட்டங்கள். கடமையைப் புறக்கணிக்கிற அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை உள்ளிட்ட நிலைகளுக்கு இச்சட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பன்னிரண்டு வலியுறுத்துகிறது.

13. வன்கொடுமையால் பாதிக்கப்படுகிற தலித் பெண் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் நீடித்த, நிலைத்த தரமான மனநல ஆலோசனை வழங்குவதற்கும் வழக்கினை அச்சமின்றி கொண்டு செல்வதற்கும் தேசிய மனித உரிமை ஆணையம், ஒவ்வொரு மாவட்டத்திலும் சாட்சிகள் பாதுகாப்பு திட்டத்தின் அடிப்படையில் தரமான பாதுகாப்பான மறுவாழ்வு இல்லங்களை அமைப்பதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பதின்மூன்று வலியுறுத்துகிறது.

14. பாலியல் வன்புணர்ச்சியால் பாதிக்கப்படுகிற தலித் பெண்கள் ஒவ்வொருவருக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ன் கீழ் ரூ.10 இலட்சம் நிவாரணம் வழங்க சிறப்பு உத்தரவினை மத்திய அரசு வெளியிட வேண்டும். குற்றவாளிகளை வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை வெளியேற்றுவதற்கு உரிய நடவடிக்கையினை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பதினான்கு வலியுறுத்துகிறது.

15. தேசிய பெண்கள் ஆணையம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தலித் பெண்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அக்கூட்டத்தில் தேசிய ஆணையங்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற தலித் உறுப்பினர்கள், தலித் பெண் இயக்கங்கள், உள்துறை அமைச்சக பிரதிநிதிகள், தலித் உரிமைகள் சம்பந்தமாக பணி செய்யக்கூடிய அரசுசாரா அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்க செய்ய வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பதினைந்து வலியுறுத்துகிறது.

16. ஐநா சபை தலித் பெண்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காக சர்வதேசிய நிதி குழுமத்துடன் இணைந்து சிறப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் இச்சிறப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துகிற பொறுப்பில் இருந்தாலும் அவற்றை கண்காணிப்பதற்கு சுதந்திரமான தலித் பெண் நிபுணர்கள் கொண்ட குழுவினை ஏற்படுத்த வேண்டும் என்று இம்மாநாட்டின் தீர்மானம் பதினாறு வலியுறுத்துகிறது.

**(A. கதிர்)**
செயல்இயக்குநர்

## ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்கள் கிராம சபையில் பங்கேற்க முடியாமல் அவதி

**ஆர்.கே.பேட்டை:** குடியரசு தினத்தில், ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்கப்படாததால், வேலைக்கு சென்றனர். இதனால், நேற்று நடந்த கிராம சபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்தனர்.குடியரசு தினத்தை முன்னிட்டு, மத்திய, மாநில அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் "டாஸ்மாக்' பணியாளர்களுக்கு, நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. குடியரசு தினத்தை அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.ஆனால் ஆண்டுக்கு, 100 நாட்கள் மட்டும் வேலை செய்ய வேண்டிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்கள், நேற்று வேலைக்கு வர வேண்டும் என, உத்தரவு இடப்பட்டது.

இதையடுத்து, தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு சென்றனர். ஆர்.கே.பேட்டை ஒன்றியம், எஸ்.வி.ஜி.புரம் ஊராட்சியைச் சேர்ந்த ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்கள், நேற்று வேலைக்கு வந்தனர்.குடியரசு தினத்தன்று விடுமுறை இல்லை என, அதிகாரிகள் உத்தரவு இட்டதன் காரணமாக, வேலைக்கு வந்த அவர்களுக்கு பூமரகுளம், பெரியகுளம் உள்ளிட்ட இடங்களில் வேலை வழங்கப்பட்டது.அனைத்து மக்களும் குடியரசு தினத்தை கொண்டாடி மகிழும் வேளையில், எங்களுக்கு விடுமுறை அளிக்கப்படவில்லை. இன்று (நேற்று) நடந்த கிராம சபை கூட்டத்திலும் பங்கேற்க முடியவில்லை என, தொழிலாளர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வட்டார வளர்ச்சி அலுவலர் ஒருவர் கூறுகையில், ""ஊரக வேலை உறுதி திட்ட பயனாளிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற நாட்கள் அனைத்தும் வேலை நாட்கள் தான். அதன் அடிப்படையில், இன்று (நேற்று) வேலை வழங்கப்படுகிறது," என்றார்.

**ஆதாரம்: தினமலர், 27.1.2013**

# நாறுகிறது என் வீட்டு பின்வாசல்

– எம். சுசித்ரா

**கேரள நகரங்கள் தங்களது கழிவுகளை கிராமப் பகுதிகளில் கொட்டுகின்றன. கிராம மக்கள் எதிர்த்துப் போராடுகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சனை, இடம் சார்ந்தும் வாழும் மக்கள் சார்ந்தும் சிக்கலாகியுள்ள பிரச்சனை, இப்போது கிராம ஊராட்சிகளை நகராட்சிகளுக்கு எதிராகவும், நகராட்சிகளை மாநில அரசுக்கு எதிராகவும் நிறுத்தியுள்ளது.**

கேரளத்தின் தலைநகரம் திருவனந்த புரத்திலிருந்து 14 கி.மீ. தள்ளி இருக்கிற ஒரு சிறிய கிராமம் விளாப்பில். பெரும்பாலும் நடுத்தர விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வாழ்கிற கிராமம். கடந்த ஆகஸ்ட் 3 அன்று காவல்துறையின் தடையாணையை மீறி, பள்ளிக் குழந்தைகள், கைக் குழந்தைகளுடன் பெண்கள் உள்பட சுமார் 5,000 பேர் ஒரு கோவில் அருகில் கூடினார்கள். தங்கள் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள, திருவனந்தபுரம் நகரத்தில் ஒரே திடக் கழிவுப் பொருள் பராமரிப்புக் கிடங்கை நோக்கி அவர்கள் 2 கி.மீ. நீளத்திற்கு ஒரு மனிதச் சுவராக அணிவகுத்து நின்றார்கள். பெண்களும் குழந்தைகளும் முன் வரிசையில் நின்றார்கள். கிடங்கு வளாகத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த 'லீச்சேட்' சுத்திகரிப்பு நிலையத்திற்கான எந்திரங்களோடு வந்துகொண்டிருந்த லாரிகளை நிறுத்த வேண்டும் என்பது அவரது கோரிக்கை. 'லீச்சேட்' என்பது அழுகும் குப்பையிலிருந்து கசிகிற ஒரு திரவமாகும்.

காலை சுமார் 7 மணி அளவில் 500 பெண் காவலர்கள் உள்பட 2500 காவலர்கள் ஆயுதங்களுடன் விலாப்பில் கிராமத்திற்கு வந்து நடவடிக்கைக்குத் தயாராக நின்றார்கள். அங்கிருந்த ஒலிபெருக்கியில், "எங்கள் குழந்தைகள் காவல்துறையினரை பூக்களுடன் வரவேற்கிறார்கள்" என்று அறிவிக்கப்பட்டது. காவல்துறையினர் அங்கு வந்திருந்ததோ திருவனந்தபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான லாரிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான். ஜுலை 26 அன்று கேரள உயர்நீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணையின்படி காவல்துறையினர் அங்கு வந்திருந்தனர். லாரிகள் தடையின்றி செல்வதற்காக அவர்கள் கிராம மக்களை கைது செய்து அப்புறப்படுத்தத் தொடங்கினர். காவலர்களும் லாரிகளும் முன்னேறி வருவதைத் தடுப்பதற்காக கிராமத்தினர் சாலை நடுவில் சொக்கப்பனை வைத்து நெருப்பு மூட்டினர். காவலர்கள் தண்ணீர் பீய்ச்சி நெருப்பை அணைத்தனர். மக்கள் தங்கள் கைகளில் கிடைத்ததையெல்லாம் நெருப்பில் வீசி அது அணையவிடாமல் எரிய வைக்க முயன்றனர். இந்த அமளியில் இரண்டு பெண் காவலர்கள் உட்பட பலரும் காயமடைந்தனர். முகமூடி அணிந்த சில இளைஞர்கள் காவல்துறை வாகனங்களையும் தாக்கினர். அவர்களெல்லாம் மாநகராட்சியின் கையாட்கள் என்று, போராட்டக் குழுவினர் கூறுகிறார்கள். இறுதியாக காவல்துறையினர் விலக்கிக்கொள்ளப்பட்டனர். "நீதிமன்ற ஆணையை செயல்படுத்துவதற்கு எங்களால் முடிந்ததைச் செய்தோம். ஆனால், மக்களின் எதிர்ப்பு மிகவும் வலுவாக இருந்தது. அவர்களோடு ஒரு போரை நடத்த நாங்கள் விரும்பவில்லை," என்று மாவட்ட கூடுதல் ஆட்சியர் பி.கே. கிரிஜா கூறினார்.

முன்னதாக, பிப்ரவரி 13 அன்று 500 காவலர்கள் துணையுடன் வந்த ஒரு குப்பை லாரியை கிராம மக்கள் தடுத்தபோது, அவர்களை காவலர்கள் அடித்துத் தாக்கினார்கள். பெண்கள் தங்களது சேலை முனைகளை கட்டிக்கொண்டு ஒரு மனிதச் சங்கிலியாக சாலையில் படுத்துவிட்டார்கள். காவலர்கள் அந்தப் பெண்கள் மீது தடியடி நடத்தினார்கள். குழந்தைகளும் கூட விட்டு வைக்கப்படவில்லை. அன்றைக்கும் காவலர்களால் வெற்றியடைய முடியவில்லை. "எங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு சுதந்திரப் போராட்டம் வாழ்வா சாவா என்கிற போராட்டம். இதில் நாங்கள் தோல்வி அடைந்துவிடக் கூடாது," என்று போராட்டத்தை நடத்தி வரும் மக்கள் குழுவான ஜனகீய சமரா சமிதி அமைப்பின் செயலாளர் எல். பெனக்ஸன் கூறுகிறார். "இந்த குப்பைக் கிடங்கால் காற்றும் தண்ணீரும் கடுமையாக மாசுபட்டுப் போனதால் கடந்த 12 ஆண்டுகளாக நாங்கள் துன்பப்பட்டு வந்திருக்கிறோம். நோய்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் விடுபட நாங்கள் விரும்புகிறோம்," என்று அந்த அமைப்பின் தலைவர் எஸ்.பர்ஹாநுதீன் கூறுகிறார்.

திருவனந்தபுரம் மாநகராட்சி நிர்வாகம் 1993ல் அந்த கிராமத்தில் 18.6 ஹெக்டர் நிலத்தை வாங்கியது. "ஒரு மூலிகைத் தோட்டம் அமைப்பதற்காக அந்த இடம் வாங்கப்பட்டதாக அதிகாரிகள் எங்களை நம்ப வைத்தார்கள்," என்று அந்த இடத்திற்கு அருகிலேயே வசிக்கும் சி. ஏசுதாஸ் கூறுகிறார். 2000வது ஆண்டில் ஒரு குப்பை நிலையம் கட்டப்படுவதைப் பார்த்த பொது மக்கள் அதை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். அறிவியலாளர்களின் கண்காணிப்பில், அந்த நிலையம் செயல்படும் என்றும், கொஞ்சம் கூட நாற்றம் இல்லாமல்

மாசு இல்லாமல் இயக்கப்படும் என்று மாநகராட்சி உறுதியளித்தது. ஆனால், அந்த இடம் ஒரு திறந்தவெளி குப்பைக் கிடங்காக மாறியது. மக்கள் எதிர்த்தபோது 24 பேர் மீது குற்றவியல் வழக்குகள் தொடுக்கப்பட்டனர்.

மாநிலத்திற்கே ஒரு முன் உதாரண குப்பை நிலையமாக இருக்கும் என்று கூறப்பட்ட அந்த நிலையம் மிகக் குறைந்த அளவிலேயே மக்கும் குப்பையை கையாள முடியும் என்பது தெரியவந்தது. ஏனென்றால் அங்குக் கொண்டு வந்து கொட்டப்படும் குப்பை பிரித்து வைக்கப்படவில்லை. பிரிக்கப்படாத குப்பை திறந்தவெளியில் குவிந்து அழுகத் தொடங்கியது. 3 கி.மீ. தொலைவுக்கு அப்பால் கூட அழுகல் நாற்றம் அடித்ததாக மக்கள் புகார் செய்தனர். குப்பையிலிருந்து கசிந்த 'லீச்சேட்' என்ற வேதிப்பொருள், அருகிலிருந்த கால்வாயில் சேர்ந்து, கரமனா ஆற்றுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் மீனப்பள்ளி தோடு ஆற்றுடன் கலந்தது. அந்த ஆற்றில் 6 நீரேற்று நிலையங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு நிலையங்கள் திருவனந்தபுரம் நகரத்திற்கு குடிநீர் வழங்குகின்றன. மற்ற நிலையங்கள் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப் பயன்படுகின்றன.

திருவனந்தபுரத்தில் உள்ள புவி அறிவியல் மையம் நடத்திய ஒரு வேதிப்பொருள் ஆய்வில், அந்தக் குப்பையில் ஏராளமான அளவுக்கு ஈயம், காட்மியம், கடுமையான நஞ்சாகிய ஆர்செனிக் ஆகிய உலோகங்கள் கலந்திருப்பதை கண்டறியப்பட்டது. இந்த உலோகங்கள் புற்றுநோய், சிறுநீரகக் குறைபாடுகள், நரம்புத் தளர்ச்சி, மரபுக் கோளாறுகள் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை. தங்களது அன்றாட வாழ்க்கையை அந்தக் குப்பை பாதிக்கத் தொடங்கிவிட்டது என்று மக்கள் கூறுகிறார்கள். "திருமணத்திற்கு மாப்பிள்ளை, பெண் பார்த்து நிச்சயிப்பது கூட முடியாத அளவிற்கு நிலைமை மோசமாகியிருக்கிறது," என்று கிராமத்தில் குடியிருக்கும் குமாரி. லதா கூறுகிறார். பலர் தங்களது நிலங்களை விற்றுவிட்டு கிராமத்தைவிட்டே வெளியேறிவிட்டனர்.

"குப்பை நிலத்திற்கு அருகில் வசிக்கக் கூடியவர்களுக்கு சுவாசக் கோளாறு, தோல் நோய், பார்வைகள் பிரச்சனை, கை–கால் வீக்கம் போன்ற பாதிப்புகள் மிக அதிகமாக ஏற்படுகின்றன", என்று விலாப்பில் ஊராட்சித் தலைவர் எஸ். ஷோபனா குமாரி கூறுகிறார். விளாப்பில் கிராமத்தின் பொது சுகாதார மையத்தில் பதிவு செய்யப்பட்ட சுவாசக் கோளாரால் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை 1991 ஆகஸ்ட்டில் 341ஆக இருந்தது, 2001 நவம்பரில் 5,895 ஆக அதிகரித்தது. பக்கத்தில் உள்ள வெள்ளநாடு கிராமத்தின் சமூக சுகாதார மையத்தில், இதே காலகட்டத்தில் பதிவான சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கையைவிட விலாப்பில் கிராமத்தில் பதிவான எண்ணிக்கை மிக அதிகம். ஆனால், இதை மறுக்கிற மாநகராட்சி நிர்வாகம், அந்த நிலையத்திலேயே வேலை செய்கிற 30 தொழிலாளிகளுக்கு எவ்வித சுகாதார பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கிறது. நகரங்களின் பிரிக்கப்படாத குப்பைகளை குறிப்பாக மக்கள் வாழும் பகுதிகளில் கொட்டக் கூடாது என்று 2000வது ஆண்டில் மத்திய அரசு கொண்டுவந்த நகர திடக்கழிவு (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள் தடுக்கின்றன. இவ்வாறு கழிவு கொட்டப்படுவது கேரளத்தின் நெல் வயல் மற்றும் ஈர நில பாதுகாப்பு சட்டம், நிலத்தடி நீர் சட்டம், கடலோர ஒழுங்காணை சட்டம் ஆகியவற்றை மீறுகிறது. சுமார் ஒன்பதரை லட்சம் மக்கள் வாழும் திருவனந்தபுரம் மாநகராட்சி தினமும் 203 டன் குப்பையை உற்பத்தி செய்கிறது. அந்தக் குப்பைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று டிச.11 அன்று விலாப்பில் கிராமம் அறிவித்தது. நகரத்திலும் குப்பை சேகரிப்புப் பணி நிறுத்தப்பட்டது. சாலை ஓரங்களிலும் தேங்கிப் போன நீர்ப்பாதைகளிலும் குப்பைகள் குவிந்தன. எதிர்பாராமல் ஏற்பட்ட புயல் மழையால் நிலைமை மேலும் மோசமானது. டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா, எலிக் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் குறித்து தகவல்கள் வெளியாயின.

**திருவனந்தபுரம் மாநகராட்சி உயர்நீதிமன்றத்தை நாடியது. மாநகராட்சிக்கு சாதகமாகவே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. "ஆனால், கிராம ஊராட்சியின் அத்துமீறிய செயலால் நீதிமன்ற ஆணையை எங்களால் செயல்படுத்த முடியவில்லை," என்கிறார் மாநகராட்சி மேயர் கே. சந்திரிகா**

உயர்நீதிமன்ற ஆணையால் ஏமாற்றம் அடைந்த கிராம ஊராட்சி, உச்சநீதிமன்றத்தை நாடியது. உச்சநீதிமன்றம், விலாப்பில் கிராமத்தில் நகரக் குப்பையை கொட்டுவதற்கு அனுமதித்தது. ஆனால், அதற்கு சில நிபந்தனைகளையும் விதித்தது. ஊராட்சியிடமிருந்து சட்டப்பூர்வ உரிமமும், கேரள மாநில மாசுக் கட்டுப்பாட்டுவாரியத்திடமிருந்து மறுப்பில்லாச் சான்றிதழும் பெற்ற பிறகுதான் தினமும் 90 டன் குப்பையை அந்த கிராமத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் நிபந்தனை விதித்தது. விலாப்பில் குப்பை நிலையத்திற்கு ஊராட்சியின் உரிமம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்றிதழ் இரண்டுமே கிடைக்கவில்லை. தனது ஒரே குப்பை நிலையத்தை பயன்படுத்த முடியாத நிலையில் 30,000 டன் குப்பையை நகரில் பல பகுதிகளில் மாநகராட்சி நிர்வாகம் குழி தோண்டிப் புதைத்தது. 1,000 டன் குப்பையை இந்திய ரயில்வேக்கு, முரிக்கம்புழா, கொச்சிவேலி ரயில் நிலையங்களில் நடைமேடை அமைக்கும் கட்டுமானப் பணிகளுக்காக "தானமாக"

வழங்கியது. இதனை மாநகராட்சியின் சுகாதார அலுவலர் டி.ஸ்ரீகுமார் தெரிவித்தார். குப்பை மேலாண்மைக்கு இவர்தான் பொறுப்பு வகிக்கிறார். வீட்டிலேயே குப்பையை பதப்படுத்தும் திட்டத்தை மக்களிடையே பரப்ப மாநகராட்சி முயற்சிகள் எடுத்து வருகிறது. அதற்கான எந்திரங்களை நிறுவுகிற குடும்பங்களுக்கு, சொத்து வரியிலிருந்து ஒரு சதவீதம் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. 2012ல் மாநகராட்சியின் பட்ஜெட் கூட்டத்தில் இதை அறிவிக்கப்பட்டது.

விலாப்பில் நிலையம் செயல்படத் தொடங்கி 12 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அதனை இழக்கக்கூடிய நிலைமை மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அதைத் தவிர்க்க சில முயற்சிகளை நிர்வாகம் மேற்கொண்டிருக்கிறது. குப்பை மலைகள் பிளாஸ்டிக் உறைகளால் மூடப்பட்டுள்ளன. தினமும் 6 லட்சம் லிட்டர். லிச்சேட் திரவத்தை சுத்திகரிக்கக் கூடிய அமைப்பை நிறுவும் பணி கிட்டத்த முடியும் தருவாயில் உள்ளது. ஆயினும், அறிவியல் பூர்வமான நிலப்பூச்சுக்கு பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் களிமண்ணைக் கூட நிலையத்திற்குள் கொண்டுசெல்வதற்கு கிராம மக்கள் அனுமதிக்க மறுக்கிறார்கள். நிலையம் முற்றிலுமாக மூடப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. மாநகராட்சி, கிராம ஊராட்சி பிரதிநிதிகளும் எதிர்ப்பாளர்களது பிரதிநிதிகளும் பங்கேற்ற ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சர் உம்மன் சாண்டி அந்த நிலையம் நிரந்தரமாக மூடப்படும் என்று உறுதியளித்ததாக பெனக்சன் தெரிவிக்கிறார். ஒரு மாற்று ஏற்பாட்டுக்கு ஆறு மாத காலம் தேவை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது. ஆனால், மக்கள் அதற்கு மூன்று மாத அவகாசமே அளித்துள்ளார்கள். கெடு முடிவடைந்தபோது கிராம ஊராட்சிமன்றம் கூடி, நகரத்திலிருந்து வரும் குப்பைகளை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. நிலையத்தில் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. கேரள உள்ளாட்சி சட்டத்தின்படியும், 1994ன் மாநகராட்சி சட்டத்தின்படியும் கிராம மக்களின் ஆரோக்கியத்தையும் சுகாதாரப் பிரச்சனைகளையும் கவனிப்பது கிராம ஊராட்சியின் பொறுப்பு என்று சோபனா குமாரி கூறுகிறார்.

மாநில அரசு குழப்பத்தில் இருக்கிறது, ‘‘நீதிமன்ற ஆணையை நிறைவேற்றாவிட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகிவிடும். அதே நேரத்தில் மக்களின் போராட்டத்தைப் புறக்கணித்துவிடவும் முடியாது,’’ என்கிறார் முதலமைச்சர். ஊராட்சி நிர்வாகத்திற்கு சாதகமாக முதலமைச்சர் செயல்படுவதாக நீதிமன்றத்தில் மாநகராட்சி நிர்வாகம் குற்றம்சாட்டியது. மாநிலத்திலும் கிராமத்திலும் ஆட்சி நிர்வாகப் பொறுப்பில் இருப்பது காங்கிரஸ் கட்சிதான். நகராட்சியை நிர்வகிப்பது மார்க்சிஸ்ட் கட்சி தலைமையிலான ஊரக இடதுசாரி ஜனநாயக முன்னணிதான்.

## விலாப்பில் நிலையம் தோல்வி அடைந்தது ஏன்

1993ல் திருவனந்தபுரம் மாநகராட்சி நிர்வாகம் தோட்டத் தொழில் மற்றும் கல்குவாரி நிறுவனமான போப்ஸ் குரூப் நிறுவனத்துடன் ஒரு உடன்பாடு செய்துகொண்டது. அதன்படி போப்ஸ் நிறுவனத்திற்கு மாநகராட்சி நிலம் வழங்கியது. போப்ஸ் நிறுவனம் அந்த இடத்தில் குப்பை சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டியது. உயிர்மப் பொருள் குப்பையை உயிரி உரமாக மாற்றுவதற்கு தினமும் 300 டன் குப்பை வழங்கப்படும் என்று மாநகராட்சி ஒப்புக்கொண்டது. அவ்வாறு வழங்கத் தவறுகிறது. ஒரு நாளைக்கு ரூ.49,995 தண்டத் தொகை வழங்கவும் மாநகராட்சி ஒப்புக்கொண்டது. ஆனால், தவறான மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மாநகராட்சி இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டது. மாநகராட்சியில் தினமும் 150 டன் குப்பைக் கூட சேகரிக்கப்படுவதில்லை. ஆந்திராவின் விஜயவாடா நகரில் உள்ள இதே போன்ற நிலையத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதுதான் விலாப்பில் நிலையம். இரண்டு மாநிலங்களின் பருவ நிலையும், குப்பைகளின் தன்மையும் வேறு வேறு என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை. ஆந்திராவைப் போல அல்லாமல் கேரளத்தில் 5 மாத காலத்திற்குத் தொடர்ச்சியாக மழை பெய்கிறது. இதனால், குப்பைகளின் ஈரப்பதம் 60 சதவீதம் வரையில் அதிகமாக இருக்கிறது. நிலையத்திற்குள் போப்ஸ் நிறுவனம், மக்கும் குப்பையையும் மக்காத குப்பையையும் பிரிப்பதற்கான சுத்திகரிப்பு அமைப்பை ஏற்படுத்தவில்லை.

அந்த உடன்பாட்டின்படி, அரசுக்குச் சொந்தமான உர நிறுவனமான ஃபெர்டிலைசர்ஸ் அண்ட் கெமிகல்ஸ் ட்ரவாங்கூர் லிமிடெட் (ஃபாக்ட்), இங்கு தயாராகும் உயிரி உரங்களை வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், போப்ஸ் நிறுவனம் நிர்ணயிக்கிற அதை வாங்கிக் கொள்வதற்கு ஃபாக்ட் நிறுவனம் தயாராக இல்லை. ஆகவே, செலவைக் குறைப்பதற்காக ஃபாக்ட் நிறுவனம் எவ்வளவு உரம் வேண்டுமென கேட்கிறதோ அந்த அளவுக்கு மட்டும் குப்பை சுத்திகரிப்பு செய்வது மீதிக் குப்பைகளை சுத்திகரிக்காமலே விட்டுவிடுவது என்று போப்ஸ் நிறுவனம் செயல்பட ஆரம்பித்தது. மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது, ஒரு நிலப்பூச்சு அமைப்பையும் லீச்சேட் சுத்திகரிப்பு அமைப்பையும் ஏற்படுத்துமாறு போப்ஸ் நிறுவனத்திடம் மாநகராட்சி கூறியது. ஆனால், அதைச் செய்ய இயலாது என்று போப்ஸ் நிறுவனம் மறுத்துவிட்டது. ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருப்பதாக அந்த நிறுவனம் அறிவித்தது. அந்த நிறுவனத்தால் 90 டன் குப்பைகளை மட்டுமே சுத்திகரிக்க முடியும், அதனால் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்க முடியாது என்பது தெரியவந்தபோது, உடன்பாட்டின் இரண்டு பங்காளிகளும் ஒரு சமரச ஏற்பாட்டிற்கு வந்தனர். அந்த நிலையத்தை மாநகராட்சியே விலைக்கு வாங்கிக் கொண்டது. காற்றையும் நீர் நிலைகளையும் மாசுபடுத்தியதற்காக, மக்களுக்குக் கடுமையான சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் சுகாதாரப் பிரச்சனைகளை ஏற்படுத்தியதற்காகவும் எவ்வித சட்டப்பூர்வ நடவடிக்கையும் போப்ஸ் நிறுவனத்தின் மீது எடுக்கப்படமாட்டாது என்று மாநகராட்சி உறுதியளித்தது.

# ஒரு சிறிய மாநிலத்தில் வளரும் குப்பைக் மூட்டை

**கேரள நிலைமையை சமாளிப்பதற்கான முயற்சிகள் இதுவரை தோல்வி**


குப்பைக் கொட்டும் பிரச்சனையில் விலாப்பில் மட்டும் தனித்து நிற்கவில்லை. கேரளத்தின் மொத்தமுள்ள 14 மாவட்டங்களில் திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், ஆலப்புழா, எர்ணாகுளம், திருச்சூர் கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய 8 மாவட்டங்கள் போர்க்களம் போன்ற ஒரு நிலைமையை சந்தித்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரே மாதிரியான கதைதான். நகர உள்ளாட்சி அமைப்புகள் குப்பைகளை சுத்திகரிப்பதற்காக என கிராமத்தில் இருந்து அல்லது கிராமத்திற்கு அருகில் நிலங்களை வாங்கிப் போடுகின்றன. சட்டப்படி அமைக்க வேண்டிய வசதிகளைச் செய்யாமலே அந்த நிலங்களில் குப்பை சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன அல்லது அவை திறந்தவெளி குப்பைக் கிடங்குகளாக விடப்படுகின்றன. இது நீர்நிலைகளையும் கெடுக்கிறது, சுற்றுச்சூழலில் மாசு பாதிப்பை ஏற்படுத்துகிறது. மக்களுக்கு ஆரோக்கியக் கேடுகளை ஏற்படுத்தி உயிரிழப்புக்குக் கூட இட்டுச் செல்கிறது. இந்தச் சிக்கல் ஒருபுறம் கிராம ஊராட்சிகளை நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் எதிராகத் திருப்பிவிட்டுள்ளது; இன்னொரு புறத்தில் நகர அமைப்புகளை மாநில அரசுக்கு எதிராகத் திருப்பிவிட்டுள்ளது. சில பகுதிகளில் கிராம மக்களுக்கு தங்களது சொந்த ஊராட்சி மன்றத்தின்மீதே நம்பிக்கை இல்லாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, புன்னோல் பெட்டிப்பாளம் கிராமத்தின் ஊராட்சி மன்றம், தனது ஊரையொட்டிய பகுதியில் தலசேரி நகராட்சி குப்பைகளைக் கொட்டக் கூடாது என்று கேட்டுக்கொண்டது. ஆனால், நகராட்சி நிர்வாகம் தொடர்ந்து குப்பைகளைக் கொட்டிக்கொண்டிருந்தபோது அந்த கிராம ஊராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிராம ஊராட்சி, தலசேரி நகராட்சி இரண்டு நிர்வாகங்களையுமே நிர்வகிப்பது இடதுசாரி ஜனநாயக முன்னணிதான். குப்பை சுத்திகரிப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு எந்த முயற்சி மேற்கொண்டாலும் அதனை பணக்காரர்களும் செல்வாக்குள்ள ஒப்பந்ததாரர்களும் உள்ள ஒரு வலுவான கும்பல் முறியடித்துவிடுகிறது என்று மக்கள் குற்றம்சாட்டுகிறார்கள். குப்பை அகற்றும் பணியை வெளியாட்களிடம் விடுவது என்று உள்ளாட்சி அமைப்புகள் முடிவு செய்தபோது மாநிலத்தின் குப்பை அகற்றும் கட்டமைப்பில் ஒப்பந்ததாரர்கள் புகுந்தனர். இந்த ஒப்பந்ததாரர்கள் குப்பைகளை வெறுமனே பெறும் குழிகளுக்குள் போட்டு நிரப்பிவிட்டு உள்ளாட்சிகளிடமிருந்து பெரும் பணத்தை சுருட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள்.

குப்பையை அறிவியல்பூர்வமாக அகற்றினால்தான் மாசுக்கேடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். உயர் அடர்த்தி பாலிஎதிலின் உறைகள், செம்மண், சரளைக்கற்கள், களிமண் ஆகியவைக் கொண்ட அடுக்குகளுக்கிடையே குப்பை கையாளப்பட வேண்டும். அதன்பின் எந்திரங்களில் செலுத்தி இறுக்கமாக்க வேண்டும்.

### மாறிவரும் குப்பைகளின் தன்மை

இந்தியாவின் மற்ற பல மாநிலங்களைப் போலவே கேரளமும் வேகமான நகரமயமாக்களைக் கண்டு வருகிறது. நிறைய சூப்பர் மார்க்கெட்டுகள் காளான்களைப் போல முளைத்துள்ளன. இதனால் எங்கும் பிளாஸ்டிக் பை கலாச்சாரம் பரவியுள்ளது. இதற்கு முன் இருந்து வந்த காகிதப் பை தொழிலையே இது அழித்துவிட்டது. குப்பைகளை பிளாஸ்டிக் பைகளில் நிரப்பி அப்புறப்படுத்தும் பழக்கத்திற்கு மக்கள் வந்துவிட்டார்கள். 2001ம் ஆண்டில் கேரளத்தில் திடக்கழிவு உற்பத்தி ஒரு நாளைக்கு 7,441 டன் ஆக இருந்தது. 2006ல் அது 8,338 டன் ஆக அதிகரித்துவிட்டது. உலக வங்கி உதவியுடன் நடத்தப்பட்ட கேரள கழிவு மேலாண்மை குறித்த ஒரு ஆய்வு இதனைத் தெரிவிக்கிறது.

**குப்பைகளின் சேர்மானத்தில் பங்களிப்பு**




### கேரளத்தில் உற்பத்தியாவது

| உள்ளாட்சிகள் | மக்கள் தொகை | ஒருநாளில் உற்பத்தியாகும் தனிநபர் கழிவு (கிராம் அளவில்) | ஒருநாளில் கழிவு உற்பத்தி (டன்) | |
|---|---|---|---|---|
| | | | சதவீதம் | 2006 |
| 5 மாநகராட்சிகள் | 24,56,618 | 400 | 13 | 1,091 |
| 53 நகராட்சிகள் | 58,10,307 | 300 | 13 | 1,935 |
| 999 கிராம ஊராட்சிகள் | 2,35,74,449 | 200 | 64 | 5,312 |
| **மொத்தம்** | | | | **8,338** |

# பாதிக்கப்பட்ட மண்

## (அதன் தினசரி கழிவுகள்)

**கேரளத்தின் மாவட்டங்கள்: 14 பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்: 8**

### கண்ணூர் மாநராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 20 டன்***

நகரத்தின் அருகில் உள்ள செலோரா கிராமத்தில் 8.09 ஹெக்டேர் நிலப்பரப்பில் குப்பை கொட்டும் தளம் அமைந்துள்ளது.

மாநகராட்சி நிர்வாகம் இந்த இடத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கழிவுகளைக் கொட்டி வருகிறது. அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டம் 5 ஆண்டுகளுக்கு முன்பாக தீவிரமடைந்தது. இப்போது மாநகராட்சி வாரத்திற்கு இரண்டு முறை கழிவுகளைக் கொட்டுகிறது.

### கோழிக்கோடு மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 150 டன்***

நகரத்தின் அருகில் உள்ள ஞெலியாமல் பரம்பு கிராமத்தில் 6.4 ஹெட்டேர் நிலப்பரப்பில் ஒரு கழிவு சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. மனிதக் கழிவுகளை கொட்டுவதற்காக என 1930ல் ஏற்படுத்தப்பட்ட இடம் இது. பிற்காலத்தில்தான் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டது. 2011ம் ஆண்டில் உள்ளூர் மக்கள், அந்த நிலையத்தை நவீனப்படுத்த வேண்டும், லீச்சேட் திரவ சேகரிப்பு மையம் ஏற்படுத்தப்பட வேண்டும். மக்காத குப்பைகளைக் கொட்டுவதற்கான பள்ளப் பகுதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 65 நாட்கள் போராட்டம் நடத்தினார்கள்.


மாநகராட்சி நிர்வாகம் இங்கு தினமும் 60 முதல் 70 டன் வரைக் கழிவுகளைக் கொட்டுகிறது. கசாப்புக் கடைகள் தங்களது கழிவுப் பொருள்களை தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு விற்பனை செய்கின்றன. சாலை ஓரங்களில் கழிவுகள் குவியத் தொடங்கிய நிலையில், தற்போது ஒரு பிளாஸ்டிக் மறுசுழற்சி நிலையத்தைக் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தலசேரி மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 15 - 20 டன்***

நகரத்தின் அருகில் உள்ள புன்னோல் பெட்டிப்பாளம் கிராமத்தில் 3.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் குப்பை கொட்டும் தளம் உள்ளது.

100 வயதாகும் இந்த குப்பைக் கொட்டும் தளம், கடற்கரைக்கு அருகில் மக்கள் அடர்த்தியாக வாழ்கிற இடத்தில் அமைந்துள்ளது. கிணறுகள் மாசுபட்டுள்ளன. மக்களுக்கு தோல், சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ளன. மீனவர்கள் தங்களுக்குக் கிடைத்துவந்த மீன்களின் அளவு குறைந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். பக்கத்திலேயே ஒரு அரசு தொடக்கப் பள்ளி உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தீவிரமானப் போராட்டங்கள் நடந்தன. 2012 மார்ச் 20 அன்று காவல்துறை தாக்குதல் நடைபெற்றது. போராளிகள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். ஊராட்சி நிர்வாகம் மாநகராட்சியுடன் ஒத்துழைக்கிறது, ஏனென்றால் இரண்டுமே இடது ஜனநாயக முன்னணியின் நிர்வாகத்தில் இருக்கின்றன என்று மக்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.



### திருச்சூர் மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 150 டன்***

லல்லூர் கிராமத்தில் 10.1 ஹெக்டேர் நிலப்பரப்பில் குப்பை கொட்டும் தளம் உள்ளது.

100 வயதாகும் இந்த தளத்திற்கு மிக அருகில் மக்கள் வாழ்கிறார்கள். 1992ல் ஒரு கிணற்றில் இறங்கி சுத்தப்படுத்திக்கொண்டிருந்த மூன்று இளைஞர்கள், நச்சுக்காற்றை சுவாசித்ததால் உயிரிழந்தார்கள். பிரச்சனைக்கு உடனடித் தீர்வுகாணுமாறு உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. 2000வது ஆண்டில் ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டது. ஆனால், அது செயல்படவில்லை. 2010ல் திடக்கழிவு மேலாண்மைக்கான லல்லூர் மாதிரித் திட்டத்தைச் செயல்படுத்த இடது ஜனநாயக முன்னணி அரசு ஆணையிட்டது. மாநகராட்சியில் அதிகாரத்திற்கு வந்த ஐக்கிய ஜனநாயக முன்னணி அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. இப்போது மாநகராட்சி ரகசியமான முறையில் இரவு நேரங்களில் கழிவுப் பொருள்களை எரிக்கிறது.

### கொச்சி மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 120 -140 டன்***

குன்னத்து நாடு ஊராட்சியைச் சேர்ந்த பிரம்மபுரம் கிராமத்தில் 14.9 ஹெட்டேர் நிலப்பரப்பில் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது.

2006ம் ஆண்டு வரையில், வெலிங்டன் தீவில் உள்ள தென்னக கடற்படைத் தளத்திற்கு அருகில் உள்ள பள்ளப் பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. கடலோர காவல் படைக்குச் சொந்தமான ஒரு விமானத்தின் பறவை மோதியதால் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து, அந்த கழிவுப் பள்ளத்திற்கு அளித்திருந்த அனுமதியை கடற்படை அதிகாரிகள் விலக்கிக்கொண்டனர். மாநகராட்சி நிர்வாகம் பிரம்மபுரம் கிராமத்தில் 1998ல் வாங்கிய ஒரு ஈர நிலப்பகுதியை கழிவுப் பள்ளமாகப் பயன்படுத்த ஆரம்பித்தது. 2008ல் ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டது. ஆனால், அது சேறும் சகதியுமான அந்த நிலப்பகுதியில் மூழ்கிவிட்டது. தற்போது அது மீட்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

### கோட்டயம் மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 30 - 35 டன்***

விஜயபுரம் கிராமத்தைச் சேர்ந்த வேடவத்தூர் பகுதியில் 1.4 ஹெக்டேர் நிலப்பரப்பில் கழிவு சுத்திகரிப்பு நிலையம் உள்ளது.

பல ஆண்டுகளாக நடந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து 2007ம் ஆண்டில் மாநகராட்சி நிர்வாகம் ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஒரு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டியது. அதனால், மொத்த கழிவின் ஒரு சிறு பகுதியை மட்டுமே உரமாக மாற்ற முடிந்தது. மீதிக் கழிவுகள் கழிவு பள்ளத்தில் கொட்டப்பட்டன. 2010ம் ஆண்டில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நிறுவனத்திற்கு சாதகமாக அமைந்தது. இப்போது அந்த நிலையத்திற்கு காவல்துறையின் பாதுகாப்புடன் கழிவுகள் அனுப்பப்படுகின்றன.

### ஆலப்புழா மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 65 டன்***

மாராரிக்குளம் தெக்கு கிராமத்தில் உள்ள சர்வோதயபுரம் பகுதியில் 4.6 ஹெட்டேர் நிரப்பரப்பில் குப்பை கொட்டும் தளம் அமைந்துள்ளது. இங்கு ஒரு கழிவு சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான ஒப்பந்தத்தை ஆந்திர பிரதேஷ் டெக்னாலஜி டெவலப்மெண்ட் சென்டர் என்ற ஒரு தனியார் நிறுவனத்துடன் மாநகராட்சி நிர்வாகம் செய்துகொண்டது. அந்த நிலையத்தில் ஒரு நாளைக்கு 30 டன் கழிவை சுத்திகரிக்க முடிந்தது. சில மாத காலத்திற்கு அந்த நிலையம் செயல்பட்டது. அதன் பின் அந்த நிறுவனம் கூடுதல் பணம் கேட்டது. உள்ளூர் வல்லுநர்களை வைத்தே அந்த நிலையத்தை இயக்கலாம் என மாநகராட்சி முடிவு செய்தது. ஆனால், இப்போது அதனால் தினமும் 6டன் கழிவுக்கு மேல் சுத்திகரிக்க முடியவில்லை. மீதிக் கழிவுகள் பிரிக்கப்படாமலே கழிவுப்பள்ளத்தில் கொட்டப்படுகின்றன.

### கொல்லம் மாநகராட்சி

***உற்பத்தியாகும் கழிவு 100 டன்***

குரீப்புழா கிராமத்தில் 4 ஹெக்டேர் நிலப்பரப்பில் குப்பை கொட்டும் தளம் அமைந்துள்ளது.

இந்த இடம், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ராம்சர் தளத்தைச் சேர்ந்த அஷ்டமுடி ஏரிக்கு அருகில் அமைந்துள்ளது. நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு 2002ம் ஆண்டின் ஒரு நிலையம் கட்டப்பட்டது. ஆனால், அது செயல்படவில்லை. அங்கு மேற்கொண்டு கழிவு கொட்டப்படக் கூடாது என்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

## கழிவுகளைக் கையாளுதல்

2006 அக்டோபரில் வி.எஸ். அச்சுதானந்தன் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசு ஒரு முக்கியமான கொள்கை முடிவை எடுத்தது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த மையப்படுத்தப்பட்ட கழிவு மேலாண்மை முறையிலிருந்து அது விலகிச் சென்றது. 11வது ஐந்தாண்டு திட்டத்தை செயல்படுத்திய அச்சுதானந்தன் அரசு 2007 நவம்பரில் ஒரு விரிவான செயல் திட்டத்தை உருவாக்கியது. அதில் மாநிலத்தின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் ஈடுபடுத்தப்பட்டன. "அந்தத் திட்டத்தின் நோக்கம் குப்பைகளின் அளவைக் குறைப்பது, குப்பைகளை மறு பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது மறு சுழற்சிக்கு உட்படுத்துவது, குப்பைகளை சுத்திகரிப்பது, கடைசியில் கழிவே கிடையாது என்ற நிலைமையை ஏற்படுத்துவது ஆகியவைதான்," என்கிறார் சுசித்வா மிஷன் என்ற அமைப்பின் அன்றைய நிர்வாக இயக்குநர் ஆர். அஜயகுமார் வர்மா. கேரளத்தின் ஒட்டுமொத்த சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய இயக்கம், சுத்தமான கேரளா இயக்கம் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டதுதான் இந்த சுசித்வா மிஷன். மலினியாமுக்தா கேரளம் என்ற முழு சுகாதாரத்திற்கான திட்டம் ஒன்றை மாநில அரசு தொடங்கியது.

மாநில அரசின் நிதி உதவி, அமைப்பு சார்ந்த உதவி மற்றும் தொழில்நுட்ப உதவியோடு ஒரு விரிவான திறன் மேம்பாட்டு நடைமுறை தொடங்கப்பட்டது. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தங்கள் பகுதிகளில் உற்பத்தியாகும் கழிவுகள் குறித்த ஆய்வுகளை விரிவாக மேற்கொண்டன. கழிவு மேலாண்மைக்கான திட்டங்களையும் உருவாக்கின. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுகாதார மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒட்டுமொத்த சுகாதார இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த அனைத்துத் திட்டங்களும் மறு கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டு கழிவு மேலாண்மை அம்சம் அதில் சேர்க்கப்பட்டது. "ஆனால், அதற்கு மேல் அந்த திட்டம் முன்னேறவில்லை," என்கிறார் எர்ணாகுளத்தில் அப்போது செயல்பட்டுவந்த ஆய்வாளர் எம். அப்பாஸ் குப்பைகளின் மாறிய தன்மைகள் காரணமாகவோ அல்லது தங்களது அரசியல் சார்புகளின் காரணமாகவோ உள்ளாட்சி அமைப்புகள் அந்தத் திட்டத்தை செயல்படுத்தவில்லை. "அந்தத் திட்டம் செயல்படத் தொடங்கியிருந்தால் கழிவு மேலாண்மையில் அது ஒரு முக்கிய முன்னேற்றமாக அமைந்திருக்கும்," என்கிறார் அவர்.

அதிகரித்துவரும் குப்பைப் பிரச்சனையை கையாள்வதற்காக 2000வது ஆண்டில் மாநில அரசு சுய உதவிக் குழுவான குடும்பஸ்ரீ அமைப்பின் பணிகளை இதில் ஒருங்கிணைக்கச் செய்தது. கேரளத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பெண்களின் வறுமை ஒழிப்புத் திட்டமாகத் தொடங்கப்பட்டதுதான் குடும்பஸ்ரீ அமைப்பு. ஆனால், வர்மா தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு, இந்தப் பெண்கள் மோசமான நிலைமைகளில் வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டுபிடித்தது. அந்தப் பெண்களுக்கு வீட்டுக்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில்தான் கூலி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், குப்பைகளைக் கொண்டு செல்வதற்கான ஆட்டோ கட்டணம் உட்பட ஒவ்வொரு தேவைக்கும் அவர்களேதான் செலவு செய்ய வேண்டியிருந்தது. அந்த ஆட்டோக்களை அவர்கள் கடன் அடிப்படையில் வாங்கினார்கள். பெட்ரோல் செலவும், கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய செலவுமாக அவர்கள் கையில் பணமில்லாத நிலைமையை ஏற்படுத்தின. கையுறைகளுக்கும், முகமூடிகளுக்கும்கூட பணம் இல்லாத நிலை ஏற்பட்டது. பல பெண்கள் தோல் நோய்களுக்கும், சுவாசக் குறைபாடுகளுக்கும் உள்ளானார்கள் என்று அந்தக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

## நிரம்பி வழியும் நிதி

சுகாதாரத் திட்டங்களை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியில் எவ்வித பற்றாக்குறையும் இல்லை. மாநிலத்தின் 5 மாநகராட்சிகளும் கேரள தொடர் நகர மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துகின்றன. அந்தத் திட்டத்திற்கு ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவி செய்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை கழிவு நீர் அகற்றுதல், சாக்கடை ஆகிய பணிகளுக்காக ரூ.596.9 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரம், கொச்சி ஆகிய மாநகராட்சிகள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதுப்பிப்பு இயக்கத்தின் கீழும் நிதி பெறுகின்றன. கழிவுநீர் மேலாண்மைக்காக திருவனந்தபுரம் மாநகராட்சி ரூ.215 கோடி பெறுகிறது. கொச்சி மாநகராட்சி திடக் கழிவு மேலாண்மை மற்றும் சாக்கடை வசதிகளுக்காக ரூ. 100 கோடி பெறுகிறது. சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டுமான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 49 நகராட்சிகள் ரூ.242.9 கோடி பெறுகின்றன. ஒட்டுமொத்த சுகாதார இயக்கத்தின்கீழ் கிராம ஊராட்சிகளும் போதுமானதிற்கும் அதிகமாகவே மத்திய அரசின் ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிதி வழங்கப்படுகிறது. "ஆனால், பெரும்பகுதி நிதி செலவிடப்படுவதேயில்லை. ஏனென்றால், அறிவியல்பூர்வமாக திடக்கழிவு மற்றும் கழிவுநீர் நிர்வாகத்தை திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப பயற்சியுடையவர்கள் கிராம ஊராட்சிகளில் இல்லை," என்று கேரள உள்ளாட்சி நிர்வாக பயிற்சி நிறுவன முன்னாள் இயக்குநர் என்.ரமா காந்தன் கூறுகிறார். இது ஒரு அரசு நிறுவனம். மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் எங்குமே சுற்றுச்சூழல் பொறியாளர் கிடையாது. மாநகராட்சிகளிலும் கூட சுகாதாரத்துறைக்குப் பொறுப்பான அதிகாரிகள்தான் கழிவு மேம்பாட்டையும் கவனிக்கிறார்கள்.

# கொச்சியின் திரைமறைவு அழுகல்

## கேரளத்தின் மிகப்பெரிய நகரம் தனது கழிவுகளை நீர் நிலைகளில் கொட்டுகிறது.

கேரள மாநிலத்தின் மிகப்பெரிய நகரமான கொச்சி ஒரு தனித்துவமான பிரச்சனையை சந்தித்துக் கொண்டிருக்கிறது. 30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிற நகரமாக இருந்தாலும் இங்கு கழிவுநீர் வெளியேற்றும் ஏற்பாடுகள் கிடையாது.

கொச்சி மாநகராட்சி தருகிற புள்ளி விவரங்கள் நம்பகமானவைதான் என்றால், இந்த நகரத்தின் 95 சதவீத மக்கள் கழிவுத் தொட்டிகளையே (செப்டிக் டாங்க்) சார்ந்திருக்கிறார்கள். 1970களில் கேரள நீர் ஆணையம் 94.88 சதுர கி.மீ. வரை செல்லக்கூடிய கழிவுநீர் குழாய்கள் திட்டம் ஒன்றை உருவாக்கியது. அதற்காக நகரம் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவேயில்லை. தற்போது, அரசுப் பொது மருத்துவமனையும் காந்திநகரும் அமைந்துள்ள நகரத்தின் மையமான 2.5 சதுர கி.மீ. பரப்புள்ள பகுதி மட்டுமே கழிவுநீர் குழாயோடு இணைக்கப்பட்டுள்ளது. சுமார் 20,000 பேருக்கு மட்டுமே இது பயன்படுகிறது என்று 2010ம் ஆண்டின் நகர மேம்பாட்டுத் திட்டம் தெரிவிக்கிறது.

நவீன கழிவுநீர் அகற்றல் ஏற்பாடு இல்லாததால் புதிய வகைப் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. இந்த மாநிலத்தின் வேறு எந்த நகரத்தையும்விட கொச்சியில் உள்ள கழிவுத் தொட்டிகள் அடிக்கடி நிரம்பி வழிகின்றன. அதற்குக் காரணம் இந்த நகரம் கடல் மட்டத்தைவிட தாழ்வாக இருப்பதுதான். ''சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் காரணமாக முக்கியமான குடிநீர் ஆதாரங்களான ஆறுகள், ஊற்றுகள், ஏரிகள் மற்றும் நீர் நிலைகளில் மாசு ஏற்பட்டுள்ளது,'' என்று கோழிக்கோடு நகரின் நீர் ஆதார மேம்பாடு மற்றும் மேலாண்மை மையத்தின் தண்ணீர் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவுத் தலைவர் பி.எஸ். ஹரிகுமார் கூறுகிறார். உண்மையில் கேரளத்தின் மூடப்படாத கிணறுகளில் 70 சதவீதம் வரை மனிதக் கழிவு மண்டிகளால் மாசுபட்டுள்ளன என்று இந்த மையமும், இந்திய தொழில்நுட்ப நிறுவனமும், யூனிசெப் அமைப்பும் இணைந்து நடத்திய ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. ''கேரளத்தில் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் தங்களது குடிநீர் தேவைகளுக்காக கிணறுகளைத்தான் நம்பியிருக்கிறார்கள் என்ற நிலையில் இது மிகவும் ஆபத்தானதாகும்,'' என்று அந்த ஆய்வு எச்சரிக்கிறது.

''கழிவுகளை வெளியேற்றுவதற்கான குழாய்கள் அமைப்பது சாத்தியம்தான்,'' என்று கொச்சி மாநகர முன்னாள் மேயர் சி.எம். தினேஷ் மணி கூறுகிறார். ''அதற்குத் தேவைப்படுவது முன்னுரிமையும் நிர்வாகத் திறமையும்தான். கழிவுத் தொட்டிகள் அடிக்கடி நிரம்புவதைத் தவிர்க்க குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக சகதியை அப்புறப்படுத்தினால் போதும்,'' என்கிறார் அவர்.

இந்த நகரத்தில் இன்னும் பழைய வகை கழிவு வெளியேற்றல் ஏற்பாடுகளும் மூடப்படாத சாக்கடைகளுமே உள்ளன. இந்த சாக்கடைகள் நிரம்பி தெருக்களில் ஓடுவது சர்வசாதாரணம் என்று 2031ம் ஆண்டிற்கான கொச்சி நகர வட்டார மேம்பாட்டுத் திட்ட முன்வரைவு தெரிவிக்கிறது. சேறு வடிவதற்கு ஏற்ற சூழல் குறைவாகவும், மக்கள் அடர்த்தி மிகுதியாகவும் உள்ள நிலைமையோடு உயரமான இடங்களில் அமைந்துள்ள நீர்நிலைகளும் சேர்ந்துகொள்வதால் சுகாதாரப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

இந்த நிலைமை சட்டவிரோதமாக கழிவுத் தொட்டி சுத்தப்படுத்துவதில் ஈடுபடுவோருக்குத்தான் சாதகமாக இருக்கிறது. கழிவுத் தொட்டிகள் நிரம்பி வழிகிறபோது கலக்கமடைவதில்லை. கழிவுத் தொட்டி சுத்தப்படுத்துவோர் தினமும் செய்தி பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். சுமார் ரூ.3,000 கட்டணம் வசூலிக்கும் அவர்கள் தொட்டி லாரி (டேங்கர்) உறிஞ்சும் பம்புகள், குழாய்கள் சகிதம் நள்ளிரவில் வருகிறார்கள். கழிவுத் தொட்டியில் சிறு ஓட்டையை ஏற்படுத்தி அதன் வழியாக கழிவுச் சகதியை எந்திரம் உறிஞ்சிக் கொள்கிறது. 30 நிமிடங்களில் வேலை கச்சிதமாக முடிந்துவிடுகிறது. பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கூட இது தெரிவதில்லை. தொட்டியில் இருந்து அகற்றப்படும். கழிவுச் சகதி எங்கே போய் கொட்டப்படுகிறது என்று யாரும் கேட்பதில்லை. ஏனென்றால் அது விரும்பத் தகாத பதிலைத்தான் கொண்டுவரும் என்பது எல்லோருக்கும் தெரியும். சுத்திகரிப்பாளரது தொட்டி லாரியின் பின்னாலேயே சென்றால் விடை கிடைக்கும். தொட்டி லாரி நகரச் சாலைகளில் இருட்டில் சிறிது நேரம் சுற்றிக்கொண்டிருக்கும். நகரச் சாலைகளில் காவல்துறையினரின் ரோந்துப் பணி நின்ற பிறகு, நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில், தங்களுக்கு வசதியான ஒரு இடத்தில் அந்தக் கழிவுகளை எல்லாம் சுத்திகரிப்பாளர்கள் கொட்டிவிடுகிறார்கள். அந்த இடம் திறந்த நிலமாக இருக்கலாம் அல்லது நகரத்திற்கு பெருமை சேர்க்கும் பல ஊற்றுகளில் ஒன்றாக, அல்லது கால்வாய்களில் ஒன்றாக அல்லது சிற்றாறுகளில் ஒன்றாக இருக்கலாம். அந்த நீர்நிலைகள், சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த, பாதுகாக்கப்பட வேண்டிய ராம்சர் வட்டாரத்தின் வேம்பநாடு காயல் ஆற்றோடு கலக்கின்றன

என்பதைப் பற்றி சுத்திகரிப்பாளர்கள் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை.

“பெரியாறு ஆற்றிலேயே ஒருமுறை கழிவுகள் கொட்டப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன்,” என்கிறார், ஆறுகள் பாதுகாப்பு இயக்கமாகிய பெரியாறு மலிநீகரண விருதா சமிதி என்ற அமைப்பைச் சேர்ந்த புருஷன் எலூர் கூறுகிறார். அந்த ஆற்றிலிருந்து வரும் தண்ணீரைத்தான் நகர மக்கள் குடிநீராகப் பயன்படுத்துகிறார்கள். ’குடிநீர்’ என்று பெரிதாக எழுதப்பட்ட தொட்டிலாரிகள் உண்மையில் கழிவுகளைக் கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறுகிறார்.


ஒரு தொட்டி லாரியில் 6,000 லிட்டர் முதல் 12,000 லிட்டர் வரை சகதியைக் கொண்டு செல்லமுடியும். அதாவது ஒரே தடவயில் மூன்று கழிவுத் தொட்டிகளின் சகதியைக் கொண்டு செல்ல முடியும். கொஞ்சம் முதலீடு செய்திருந்தாலே போதும் சுத்திகரிப்பாளர் ஒரே தடவயில் சுமார் ரூ.9,000 வரை சம்பாதித்துவிட முடியும். “இந்த வேலைகளில் ஈடுபடுகிறவர்கள் சாதாரணத் தொழிலாளிகள்தான். கழிவுநீர் அகற்றல் நிறுவனங்களை நடத்தி வருகிற வலுவான கும்பல் அவர்களுக்கு பாதுகாப்பாகவே இருக்கிறது,” என்று கூறுகிறார் எலூர்.

இதெல்லாம் நிர்வாகத்திற்கு தெரியாது என்பதல்ல. “இப்படிப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கழிவுநீர் அகற்றல் நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன,” என்று ஒப்புக்கொள்கிறார் எர்ணாகுளம் மாவட்ட மாசுக் கட்டுப்பாட்டுவாரிய தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர் வி.எஸ். மைதிலி. ஆனால், ஏராளமான கழிவுத் தொட்டிகளை எப்படி ஒரு தொடர்ச்சியான கால அளவில் சுத்தப்படுத்துவது என்பது குறித்தத் தெளிவான திட்டம் எதுவும் நிர்வாகத்திடம் இல்லை. நகரில் தற்போது ஒரே ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்தான் இருக்கிறது. அதில் ஒரு நாளில் சுமார் 44 லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் சாக்கடையைத்தான் சுத்திகரிக்க முடியும். அதாவது நகர மக்களில் 5 சதவீதத்தினரின் தேவை மட்டுமே அந்த சுத்திகரிப்பு நிலையத்தால் ஈடுகட்ட முடியும்.

“உரிமம் பெறாமல் செயல்படும் கழிவுநீர் அகற்றல் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்,” என்கிறார் கொச்சி மாநகராட்சி செயலர் அஜித் பாட்டீல். “ஆனால், ஒரு நடைமுறைக்கு ஏற்ற ஒரு சரியான மாற்று ஏற்பாடு இல்லாமல் அதைச் செய்வது சாத்தியமா,” என்றும் அவர் கேட்கிறார். அண்மையில் மாநகராட்சி நிர்வாகம் கொச்சி துறைமுக நிறுவனத்துடன் ஒரு உடன்பாடு செய்துகொண்டுள்ளது. அதன்படி நகர கழிப்படைகளில் இருந்து அகற்றப்படும் சேறு, துறைமுக நிறுவனத்தின் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது.


கொச்சியின் மேற்குப் பகுதியில் தனது சொந்த நிலையத்தை அமைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது. ஆனால், அது செயல்படத் தொடங்குவதற்கு அதிக நாட்களாகும் என்று தெரிகிறது. இதுவரையில் 1.62 ஹெட்டர் நிலம் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. “அந்த நிலத்தைப் பயன்படுத்தி நகரத்தின் கழிவுத் தேக்கப் பிரச்சனையில் பாதியை மட்டுமே சமாளிக்க முடியும்,” என்கிறார் பாட்டீல். மீதிப் பாதியின் கதி என்ன? “உரிய காலத்தில் அந்தப் பிரச்சனையும் தீர்க்கப்படும்,” என்ற பதிலை மட்டுமே இப்போதைக்கு மாநகராட்சியால் சொல்ல முடிகிறது.

**தகவல்கள்: பி.என். வேணுகோபால்**




ஆதாரம்: DOWN TO EARTH, 2012 செப்டம்பர் 1–15

*For Private Circulation Only*




by: Malik Sajad

Courtesy: www.greaterkashmir.com

வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா
தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின்
அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com
இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org